# நிதி நிலை அறிக்கை
# 1991-92

*நிதி அமைச்சர்*

மாண்புமிகு

## திரு. இரா. நெடுஞ்செழியன்

*அவர்கள் ஆற்றிய உரை*

ஆவணி 19, திருவள்ளுவர் ஆண்டு 2022

1991ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4ஆம் நாள்

Fin. B.Word.I Dept
STOCK COPY

தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1991-92ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1991ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4ஆம் நாளன்று ஆற்றும் உரை :

*மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே !*

*"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தர்க் கியல்பு".*

*உலகம் போற்றும் பெரும்புலவர் திருவள்ளுவப் பெருந்தகையார், "அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவுபடாமல் இருத்தலே ஆள்வோருக்கு இயல்பாகும்" என வழங்கியுள்ள இந்த அறிவுரைகளைப் பின்பற்றி இயங்கும் இந்த அரசின் சார்பாக, 1990-91ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1991-92ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் நான் இந்த அவை முன் வைக்க முற்படுகிறேன்.*

**2.** *மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றபோது, இந்த நிதியாண்டின் முதல் ஆறு திங்கள்களுக்குச் செலவு செய்ய நாடாளுமன்றத்தில் 'உடனடிச் செலவுக்கான மானிய முன் அனுமதி' பெறப்பட்டது என்பதை, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவுகூரலாம். எஞ்சிய ஆறு திங்கள்*

களுக்கான மதிப்பீடுகளைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு இந்த அவையின் ஒப்புதலை வேண்டுகிறேன்.

3. இந்தியக் குடியரசின் வரலாற்றிலேயே இதுவரை காணாத அளவுக்குப் பெரும் வெற்றியைப் பெற்று, புரட்சித்தலைவி செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் இந்த ஆட்சி அண்மையில்தான் பதவி ஏற்றது. இத்தேர்தல்கள், தமிழ் நாட்டு மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்திலும், நமது ஆட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் அசைக்க முடியாத முழு நம்பிக்கையைக் கொண்டுள்ளனர் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

4. வரவு-செலவுத் திட்டத்தை அவை முன் வைப்பதற்குக் குறுகிய கால அளவே நேரம் கிடைத்த நிலையிலும், இவ்வரசு, தற்போது நடைமுறையிலுள்ள அனைத்துத் திட்டங்களையும் விரிவான முறையில் ஆய்வு செய்து, புதிய திட்டங்கள் பலவற்றை வகுத்துள்ளது. இம்மாநிலத்தில் நிலைத்த, நீடித்த வளர்ச்சிப் பணிகள் குறித்த திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முயற்சிகளை மேற்கொள்ளும் அதே சமயத்தில், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், ஆகியோரின் நலன்களை உடனடியாகப் பாதுகாத்து மேம்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

5. மேலும், நாடளாவிய வகையில், இன்று நிலவி வரும் பொருளாதார நிலையைக் குறித்த குறிப்புக்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர

விரும்புகிறேன். நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகக் கடுமையான பொருளாதாரச் சிக்கல்கள் பலவற்றையும் உறுப்பினர்கள் நன்கு அறிவர். விலைவாசிகள் மிகப் பெரிய அளவில் உயர்ந்துள்ளன. மேலும் படிப்படியாக உயருகிற நிலைமையும் உருவாகியுள்ளது. 1990-ல் தொடங்கப்பட்டிருக்க வேண்டிய எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம், தொடங்கப்படாமல் காலந் தாழ்த்தப்பட்டுள்ளதால், வளர்ச்சிப் பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுப் பின்னடைந்துள்ளன. பெருமளவிலான அயல் நாட்டுக் கடனும், குறைந்த அளவிலான அந்நியச் செலாவணி கையிருப்புத் தொகை நெருக்கடியும், உலகில் நம் நாட்டின் பொருளாதார நம்பகத்தன்மையை, மிகவும் தாழ்த்தி விட்டன என்பது தெளிவு. நாட்டின் பொருளாதார நிருவாகம் குறித்த அதிகாரங்கள் பலவும், மத்திய அரசின் பொறுப்பில் உள்ளன என்றாலும், மாநில அரசுகளுக்கு அவற்றைப் பொறுத்து மிகுந்த அக்கறை ஏற்பட நியாயம் உள்ளது. எனவேதான், இந்தியாவைப் பாதுகாப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் மத்தியக் கூட்டாட்சி யினிடத்திலும், மக்களை வாழ வைப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடத்திலும் அமைய வேண்டும் என்பதை இந்த ஆட்சி வலியுறுத்தி வருகிறது. பொருளாதார நிலையை முழு அளவில் சீரமைப்பதற்கு மத்திய அரசு எடுக்கின்ற நியாயமான முயற்சிகளுக்கு இந்த அரசு எப்பொழுதும் முழு ஒத்துழைப்பையும் நல்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா வழியில், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். எடுத்துரைத்துள்ள ''கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம்'' என்பதே இந்த ஆட்சியின் குறிக்கோளாக இருந்து வருகிறது. இக்கோட்பாட்டினைப் பின்பற்றி,

நாட்டுச் சீரமைப்புப் பணியில் மாநிலங்கள் தங்களை முழு அளவில் ஈடுபடுத்திக் கொள்ள இயலும் வகையில், விரைவில் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

6. மத்திய அரசு ஏற்றுக் கொண்டு செயல்படுத்தியுள்ள ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் தமிழ் நாட்டிற்கு மன நிறைவளிப்பதாக இல்லை. ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், அடிப்படை ஆயத் தீர்வைகளில் மாநிலங்களுக்கு 40 சதவீதம், பற்றாக்குறை மாநிலங்களுக்கு 5 சதவீதம், ஆக மாநிலங்கள் அனைத்திற்கும் மொத்தம் 45 சதவீதம் வழங்கப்பட்டது. ஒன்பதாம் நிதிக்குழு, மாநிலங்களின் பங்கை 40 சதவீதம் என்பதிலிருந்து 37.575 சதவீதமாகக் குறைத்தும், பற்றாக்குறை மாநிலங்களின் பங்கை 7.425 சதவீதம் ஆக அதிகரித்தும், மாநிலங்களுக்குரிய மொத்தப் பங்கு 45 சதவீதம் ஆகத் தொடர்ந்து இருக்குமாறு பரிந்துரைத்துள்ளது. இக்குறைப்பானது, மாநிலங்களின் வருவாயின் முக்கிய வாயில்களில் ஒன்றாகத் திகழக் கூடிய அடிப்படை ஆயத் தீர்வை வருவாயில், மாநிலங்களுக்கான பங்கின் அளவைப் பெரிதும் குறைத்து விட்டது.

7. திட்ட வருவாய் மானியம் குறித்த ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள், தமிழ் நாட்டிற்கு மனநிறைவளிப்பதாக அமையவில்லை என்பது மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 1990–95ஆம் ஆண்டுக் கால அளவிற்கு, திட்ட வருவாய் மானியங்களாக ரூபாய் 9,000 கோடி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ் நாட்டிற்கு வெறும் ரூபாய் 43.79 கோடி மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. உபரிகள், பற்றாக்குறை ஆகியவை குறித்து ஒன்பதாம் நிதிக் குழு எடுத்துக்

காட்டியுள்ள கணக்கீடுகளும், திட்ட வருவாய்க் கூறுக்கான அதன் கணிப்பும் முழுவதுமாகப் பிழைபட்டுள்ளன என்பது இப்போது தெரிய வந்துள்ளது. கடந்த ஆண்டு ஏற்பட்ட விலை உயர்வு காரணமாக இது மேலும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. ஆகையால், மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளதான ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளை, தேசிய வளர்ச்சிக் குழு விரிவாக மறு ஆய்வு செய்ய வேண்டுமென இந்த அரசு வலியுறுத்த எண்ணியுள்ளது. குறிப்பாக, அடிப்படை ஆயத்தீர்வையில் மாநிலங் களுக்கான பங்கை 45 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாக உயர்த்த வேண்டுமெனவும், இவ்வாறு உயர்த்தப்பட்ட பங்கான 55 சதவீதத்தில், 7.5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டுமெனவும் எஞ்சிய 47.5 சதவீதத்தை அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கவேண்டுமெனவும் இந்த அரசு கேட்கும். திட்ட வருவாய் மானியங்களைப் புதிதாகக் கணக்கிட வேண்டும்; அல்லது, புதிய சம பங்கீட்டுக் கோட்பாட்டின்படி ஒதுக்கப்படவேண்டும். தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் விரைவில் கூட்டப்படுமென நம்புகிறோம். அவ்வாறு கூட்டப்படும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தின் முன் இந்த வேண்டுகோள்கள் எடுத்து வைக்கப்படும்.

8. ''காட்கில் விதிமுறை'' என்பது மாநிலத் திட்டங்களுக்கு மத்திய நிதியுதவி கிடைப்பதற்கு வழி வகை செய்யும் ஒரு வாய்ப்பாடாகும். 1990 அக்டோபரில், மத்தியில் அப்போதிருந்த அரசு, திருத்தப்பட்ட காட்கில் விதி முறையில் வேக வேகமாகச் சில மாற்றங்களைச் செய்தது. இந்த மாற்றங்கள் தமிழ் நாட்டைப் பெரிதும் பாதித்துள்ளன. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக்

குழுவின் துணைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். இந்தப் பிரச்சினை முழுவதையும் தேசிய வளர்ச்சிக் குழு மீண்டும் புதிதாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதே நமது விருப்பம். தமிழ் நாட்டின் சராசரி நபர்வாரி வருமானம் ஏறத்தாழ தேசிய சராசரி நபர்வாரி வருமானத்தின் அளவிற்கு ஒப்ப உள்ளது. எனவே, மத்திய நிதி உதவி ஒதுக்கீட்டில் தமிழ் நாட்டிற்குத் தனிப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது இன்றியமையாததாக இருந்து வருகிறது.

9. மைய-மாநில நிதி உறவுகள், கூட்டாட்சி அமைப்பில் ஒரு முக்கியப் பகுதியாக விளங்குகிறது. மைய-மாநில நிதி உறவுகள் குறித்துச் சர்க்காரியா கமிஷன் செய்துள்ள பரிவுரைகளைப் பற்றி உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நாங்கள் கேட்டுக் கொண்டவாறு கூட்டப்படவிருக்கும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், இந்தப் பரிவுரைகள் விரிவாகப் பரிசீலிக்கப்படுவதை நாங்கள் வரவேற்போம். மிகவும் அவசரத் தன்மை வாய்ந்த இரண்டு பிரச்சினைகள் பற்றி மட்டும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். சரக்கு ஒப்படை வரி விதிப்பது தொடர்பாகப் பரிசீலிப்பதற்காக, மத்திய அரசு பலமுறை மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டியுள்ளது. இக்கூட்டங்கள் அனைத்திலும் இந்த வரி விதிக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வரியை விதிப்பதற்கு விரைவில் சட்ட முன் வடிவு ஒன்றைக் கொண்டு வருமாறு நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம். இரண்டாவது பிரச்சினை, மாநில அரசுத் துறை நிறுவனங்களும், வாரியங்களும் பொது மக்கள், வங்கிகள், ஆகியோரிடமிருந்து நிதி ஆதாரங்களைத் திரட்டுவது தொடர்பானதாகும்.

மத்திய அரசுத் துறை நிறுவனங்களைப் போல, மாநில அரசுத் துறை நிறுவனங்கள் இவ்வாறு நிதி திரட்டுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பது நல்வாய்ப்பற்ற நிலைமையாகும். கடனீட்டுப் பத்திரங்கள் மூலம் நிதி திரட்ட மாநில அரசுத் துறை நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டால், நாம் விரைவான வளர்ச்சியை அடைய முடியும் என்பது எங்களுடைய கருத்தாகும். இதுகுறித்து நான் மத்திய நிதி அமைச்சருக்கு எழுதியுள்ளேன். இது, விரைவில் பரிசீலிக்கப்படும் என நான் நம்புகிறேன்.

## எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

**10.** எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 1990 ஏப்ரல் 1ஆம் நாளிலிருந்து தொடங்குவதாக முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி, கடந்த ஆண்டு ஏற்பட்ட விலைவாசி உயர்வு ஆகியவற்றின் காரணமாக எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்க இயலவில்லை. அது தற்போது 1—4—1992 முதல்தான் தொடங்கும் என்றும், அது 1992ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளைக் கொண்டதாக இருக்கும் என்றும் மத்திய திட்டக் குழு இப்பொழுது தெரிவித்துள்ளது. இந்த மாற்றத்தை இந்த அரசு உள்ளத்தில் கொண்டு, தமிழ் நாட்டின் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியை, சிறந்த வல்லுநர்களைக் கொண்டதாகத் திருத்தியமைக்கப் பெற்ற மாநிலத் திட்டக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. நடப்பு நிதி ஆதார எதிர் பார்ப்புக்களின் அடிப்படையில், 1992-97-க்குரிய எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் ரூபாய் 9,000 கோடியிலிருந்து ரூபாய் 9,500 கோடி வரை திட்ட ஒதுக்கீட்டுக்கு வகை செய்ய வேண்டி

வரும். இது தொடக்க மதிப்பீடுதான். அதிக திட்ட ஒதுக்கீட்டைப் பெறும் பொருட்டு, நிதி ஆதார அடிப்படை குறித்து, நாம் விரிவாக ஆய்வு செய்ய வேண்டிய இன்றியமையாமை ஏற்படும்.

## நிதி நிலை

**11.** மாநிலத்தை எதிர் நோக்கியுள்ள தாங்க வொண்ணாத நிதி நெருக்கடியைப்பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசு பதவி ஏற்றபோது எதிர் கொண்ட மிக மோசமான நிதி நிலையைப் பற்றி இந்த அவைக்குத் தெரிவிப்பது எனது முக்கிய கடமையாகும். 1990-91ஆம் நிதி ஆண்டு, மிகக் கடுமையான பற்றாக் குறையுடன் முடிவடைந்தது. நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 1991–92 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள், இந்த ஆண்டில் ஏற்படும் பற்றாக்குறையை ஏற்கெனவே காட்டின. அதற்குப் பின்னர் பல புதிய செலவுப் பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி தவணைத் தொகை கொடுப்பது இரண்டு மடங்குக்கு மேல் பெருகி விட்டது. பொது விநியோக ஏற்பாட்டின் கீழ் அரிசி வழங்குவதற்கான உதவித் தொகை கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட விவசாய-ஊரகக் கடன் நிவாரணத் திட்டத்தின்படி, அதற்குச் செலவிடும் தொகையில் பாதியை 3 ஆண்டுத் தவணைகளில் மாநில அரசு திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

**12.** இந்த அரசு பதவி ஏற்றவுடன், மலிவு விலை மதுக் கடைகள் அனைத்தையும் மூட ஆணை யிட்டுள்ளது. இதன் மூலம், ''தமிழ் நாட்டில் தாய்மார்களின் துயரைத் துடைத்து இலட்சக்

தணக்கான இல்லங்களில் ஒளியேற்றுவோம்'' என்று மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. இதனால், 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 322 கோடி அளவிற்கு மேலும் வருவாய் இழப்பு ஏற்படும் என்ற நிலையிலும், நாங்கள் எங்கள் தேர்தல் அறிக்கையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை உறுதியாக நிறைவேற்றும் வகையில், இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

**13.** தமிழ் நாடு மின்வாரியம், பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் நிதி நிலைமை மிகவும் சீர்கேடடைந்துள்ளது. அவற்றைப் போல, தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் ஏனைய பல பொதுத் துறை நிறுவனங்களின் நிதி நிலைமையும் கணிசமான அளவிற்குச் சீர்கெட்டுள்ளது. இதனால், இந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

**14.** இந்த நிலைமைகளையெல்லாம் சீர்செய்தாக வேண்டும். கடும் நிதி நெருக்கடி எழுந்துள்ள நிலையிலும், திட்டச் சாதனை பாதிக்கப்படாமலிருக்க இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஆய்வு செய்து தங்களது மேலான கருத்துக்களை நல்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

## ஆண்டுத் திட்டம்

**15.** திட்டமிட்ட வளர்ச்சிக்கு உயரிய முன்னுரிமை கொடுப்பதென்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். 1990-91-ல் தமிழ் நாட்டில் நபர்வாரி திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரி நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டைவிட மிகவும் குறைவாகவே இருந்தது.

வரலாறு காணாத அளவுக்கு நிதி ஆதார நெருக்கடியை நாம் எதிர் நோக்கியுள்ள போதிலும், 1991-92-ல் ரூபாய் 1,600.49 கோடி திட்ட ஒதுக்கீட்டுக்குச் செலவு செய்ய நாம் முடிவு செய்துள்ளோம். மாநிலத்தில் உள்ள வளர்ச்சி நடவடிக்கைகள் விரைவு படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்யும் வகையில் இது அமைந்துள்ளது. எங்களது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, திட்டங்களுக்கும் திட்டப் பணிகளுக்கும் முறைப்படி தொகைகளை ஒதுக்க நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இந்த மாநிலம் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெறத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதே எங்கள் நோக்கமாகும். இனி, நான் இவ்வரசின் திட்டங்களைப்பற்றியும் திட்டப் பணிகளைப்பற்றியும் எடுத்துக்கூற முற்படுகிறேன்.

### காவல் துறை

**16.** இம்மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்காவிடில், வளர்ச்சிப் பணிகளைப் பொறுத்து மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் எவ்விதப் பயனையும் அளிக்காமற் போகும். திட்ட மிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு சட்டம் — ஒழுங்கைப் பராமரிப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகள் ஆகியோரின் நடவடிக்கைகள், விரும்பத்தகாத வகையில் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதையும், அதனால் நம் மக்களின் வாழ்க்கையில் குழப்பமும் கலக்கமும் ஏற்பட்டுள்ளதையும், இந்த அவை உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். சட்டம் - ஒழுங்கைச் சீரமைத்து, மக்கள் அச்சமின்றி வாழ இயலும் வகையில், அமைதியை நிலை நாட்ட, மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் உறுதியான, தெளிவான, திண்மையான நடவடிக்கைககளை எடுத்துள்ளார்கள். இம்மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்கக் காவல் துறையினர் மிகச் சிறந்த முறையில் பணிபுரிய இயலும் வகையிலும், காவல் துறையை நவீனப்படுத்தி, அவர்கள் உள்ளம் தளராமல் ஊக்கத்துடன் பணிபுரியச் செய்யும் முறையிலும், அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுப்போம். காவல் துறைக்கு, 1990-91 ஆம் ஆண்டில் ரூபாய் 188.68 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாண்டில் நாங்கள் ரூபாய் 241.53 கோடி மொத்த ஒதுக்கீடு செய்துள்ளோம். காவற்படையை நவீனமயமாக்குவதற்கு ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 80.45 கோடி செலவில் நவீனமயமாக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்குமாறு நாட்டின் பிரதமருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள்.

## வேளாண்மை

**17.** முதன்மைத் துறையாக அமைந்துள்ள வேளாண்மையும், அதனைத் சார்ந்த பணிகளும் மாநிலத்தின் உற்பத்தியில் 21 சதவீதம் ஆகும். சென்ற ஆண்டு உணவு தானியங்களின் மொத்த உற்பத்தி திட்ட இலக்கான 80.50 இலட்சம் மெட்ரிக் டன்னைவிட குறைவாக 75.44 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் இருந்தது. இதில் அரிசி உற்பத்திக்கு இலக்கு 60 இலட்சம் மெட்ரிக் டன். ஆனால் உற்பத்தி 57 இலட்சம் மெட்ரிக் டன் மட்டுமே. வேளாண்மையில் தீவிர வளர்ச்சியை ஏற்படுத்த நாம் புதிய பல திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

**18.** எங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தவாறு நிரந்தரமான தரிசு, கரம்பு நிலங்களில் சாகுபடி செய்வதற்குரிய புதிய திட்டமொன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப் படவிருக்கிறது. இத்திட்டம், தருமபுரி, மதுரை, திண்டுக்கல்-அண்ணா, இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருநெல்வேலி—கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகிய 8 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். ஓராண்டு கால அளவில் ரூபாய் 1.50 கோடி செலவில் 25,000 ஏக்கர் பரப்புடைய இத்தகைய தரிசு நிலங்கள் விவசாயத்துக்குக் கொண்டு வரப்படும். இந்தப் புதிய திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூபாய் 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19.** வேளாண்மை விரிவாக்கப் பணிகளை சீர்திருத்தி அமைத்துள்ளோம். விரிவாக்கப் பணியாளர் குழு பரந்த குறிக்கோளைக் கொண்டதாகவும், பல்வகைப் பிரச்சினைகளை சமாளிக்க வல்லதாகவும் இருக்கும் வகையில், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் நமது நோக்கமாகும். விவசாயிகளுக்குத் தரமான விதைகளை வழங்குவதற்காக, மொத்தம் ரூபாய் 1.81 கோடி மூலதனச் செலவில் அரசு விதைப் பண்ணைகள் வலுப்படுத்தப்படும். கடலூரிலுள்ள நிலையத்தில் நுண்ணுயிர் வளர்ப்பு வசதிகள், 10 இலட்சம் பாக்கட்டுகளிலிருந்து 15 இலட்சம் பாக்கட்டுகளாக விரிவுபடுத்தப்பட இயலும் வகையில் வலுப்படுத்தப்படும்.

**20.** அரிசி உற்பத்தி மேம்பாடு குறித்த ஒருங்கிணைந்த திட்டம் ஏற்கெனவே செயற்படுத்தப் பட்டு வரும் பத்து மாவட்டங்களுடன் மேலும் மூன்று மாவட்டங்களில், அதாவது, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். 1991-92ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 5.33 கோடியாகும்.

**21.** புன்செய் நில வேளாண்மையில் சிறப்புக் கவனம் செலுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். **மானாவாரிப் பகுதிகளுக்கான தேசிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 14 மாவட்டங்களிலுள்ள 84 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட இருக்கிறது.** ரூபாய் 35.61 கோடி செலவிலான இத்திட்டம், 5 ஆண்டுகளில் சுமார் 2,20,000 ஏக்கருக்குப் பயனளிக்கும் வகையில் செயல் படுத்தப்படும். நடப்பாண்டில் ரூபாய் 2.09 கோடி செலவில் சுமார் 50,000 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

**22.** மேலும், மூன்று மாவட்டங்களுக்கு, அதாவது, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் மாவட்டங்களுக்கு நீர்வரத்து மேம்பாட்டு விரிவுத் திட்டத்தை நீட்டிப்பதற்காக நாங்கள் ‘டேனிடா’ உதவியைக் கேட்டுள்ளோம். இப்புதிய திட்டம் நான்காண்டுகளில் ரூபாய் 10.50 கோடி ஒதுக்கீட்டுடன் 45,000 ஏக்கரில் செயல்படுத்தப்படும். அழிந்துபட்ட நிலங்களில் நிலைத்த வேளாண்மை வளர்ச்சியைக் கொண்டுவர இத்திட்டம் பெரு முயற்சியாக அமையும்.

**23.** வேளாண்மை உற்பத்தித் திறனை மேம்படுத்த வேண்டியிருக்கிறது. **“டேனிடா” உதவியுடன், வேளாண்மையில் பண்ணை மகளிருக்குப் பயிற்சியளிக்கும் பெருந்திட்டமொன்றை நடப்பாண்டில் நடைமுறைப்படுத்துவோம்.** எட்டாண்டுகளில் ரூபாய் 18 கோடி செலவில் ஒவ்வோர் ஆண்டும் 9,000 மகளிருக்கு மேம்படுத்தப்பட்ட வேளாண்மையில் பயிற்சி அளிக்கும் வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம். அதே சமயம், விவசாயிகளுக்கான 12 பயிற்சி மையங்கள் வலுப்படுத்தப்பட்டு, நவீனப் பண்ணை நடவடிக்கைகளில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் புதிய திட்டங்கள் தொடங்கப்படும்.

**24.** தருமபுரி, வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணா மலை-சம்புவராயர், தென்னார்க்காடு, சேலம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 50 இலட்சம் செலவில் நடப்பாண்டில் புதிய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்குத் தரமான எண்ணெய் வித்துக்கள் வழங்கப்படும். அத்துடன், பாசன வசதி பெறும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கத் தெளிப்பு நீர்ப்பாசன, சொட்டு நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்படும்.

**25.** பாசனத்தில் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன் படுத்துவதை ஊக்குவிக்க வேண்டியது முக்கியமானதாக அமைந்துள்ளது. சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் குறித்த பழைய திட்டங்கள் நன் முறையில் செயல்படவில்லை. ரூபாய் 40 இலட்சம் செலவில் சொட்டு நீர்ப் பாசனத்தையும் தெளிப்பு நீர்ப் பாசனத்தையும் விளம்பரப்படுத்தும் வகையில் திருத்தப்பட்ட திட்டமொன்றை மேற்கொள்ள நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

**26.** ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டிற் கான திட்டங்களை நாங்கள் விரிவுபடுத்த வுள்ளோம். கடன் வழங்கு ஏற்பாடுகள் வலுப் படுத்தப்படும். தோட்டக்கலை உற்பத்திப் பொருளின் விற்பனையைக் குறிப்பாகப் பதப்படுத்தும் பணி களுக்கு முக்கியத்துவம் தந்து வலுப்படுத்துவது பற்றி நாங்கள் ஆய்வுசெய்து வருகிறோம்.

**27.** விவசாய ஊரகக் கடன் நிவாரணத் திட்டம் குறித்து முந்தைய மத்திய அரசு அறிவித்த தனால் ஏற்பட்ட நிலைமை பற்றி மதிப்பிற்குரிய

உறுப்பினர்கள் நன்கு அறிவர். நல்வாய்ப்பற்ற தன்மையால் இத்திட்டம் முறையான ஏற்பாடு களின்றி அறிவிக்கப்பட்டது. கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில், திட்டத்தின் பாதிச் செலவை மூன்றாண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்து மாறு மாநில அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபாய் 289.43 கோடியாகும். இதுவரை, ரூபாய் 191.29 கோடி மட்டுமே மத்திய அரசு கொடுத்துள்ளது. இன்னும் வர வேண்டிய தொகை ரூபாய் 98.14 கோடியாகும். இந்த அரசு 1991-92-ல் ''நேபார்டு'' நிறுவனத்துக்கு ரூபாய் 37.22 கோடி கொடுக்க வேண்டியுள்ளது. நாங்கள் இப்பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளோம். இத்திட்டத்தின் முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்க வேண்டும் அல்லது திருப்பிச் செலுத்துவதில் கால அவகாசம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளோம். எனவே, இத்தொகைக்கு நாங்கள் நிதியொதுக்க வில்லை. பயிர் விளைச்சல் இல்லாமற் போகும் நிலைமைக்கு ஆளாகிற விவசாயிகளுக்கு நிவாரணமளிக்க, உரிய ஏற்பாடுகளைச் செய்து தருவதே எங்களது நோக்கமாகும். தற்போதுள்ள பயிர்க் காப்புறுதித் திட்டங்களை நாங்கள் விரிவாக ஆய்வு செய்ய விருக்கிறோம். தற்போதுள்ள நிவாரணத் தொகை களைப் பயன்படுத்துவது பற்றியும் நாங்கள் ஆய்வு செய்யவிருக்கிறோம். உண்மையிலேயே இன்னலுறும் விவசாயிகளுக்கு நிவாரணமளிக்கும் நீண்டகாலத் திட்டம் ஒன்றை, நாங்கள் ''நேபார்டு'' நிறுவனத்திடம் எடுத்துக் கூறக் கருதியுள்ளோம்.

**பாசனம்**

**28.** தமிழ்நாடு, நில மேற்பரப்பு நீர் முழுவதை யும் பெரும்பாலும் பயன்படுத்தி விட்டது. நாட்டி லுள்ள அனைத்து நதிகளையும் இணைக்கும் தொலை

நோக்குத் திட்டத்தின் முதல் கட்டமாக, மகா நதியையும் வைகையாற்றையும் இணைத்து இந்தியத் தீபகற்பப் பேராறுகள் இணைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசிடம் நாங்கள் எடுத்துரைத்துள்ளோம். இதனை, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு தேசியத் திட்டமாகச் சேர்க்க நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**29.** காவிரி நீர்த் தாவாவில் கருநாடக அரசு எடுத்த முடிவினால் ஏற்பட்ட நிலைமை குறித்து உறுப்பினர்கள் நன்கு அறிவர். நீதிமன்றத் தீர்ப்பின் மூலமே இத்தாவா தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

**30.** தென்மேற்குப் பருவமழை பரவலாக நன்கு பெய்துள்ளது. இதனால் முக்கியமான நீர்த் தேக்கங் களில் நிலைமை நன்றாக உள்ளது. இதன் மூலம் விவசாயிகள் நல்ல விளைச்சல் காண்பது உறுதியாகி யுள்ளது. நிலத்தடி நீர் பெருமளவில் பயன்படுத்தப் படுவதையும், நீர் மட்டம் குறைந்து வருவதையும் கருத்திற் கொண்டு, தமிழ்நாட்டில் நீரைச் சிக்கன மாகப் பயன்படுத்துவது குறித்த விரிவான சட்டம் இயற்றுவதற்கான நிலை தோன்றியுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். அரிதாக உள்ள நம்முடைய நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க அனைவரின் ஒருமித்த பொதுக் கருத்து உருவாக வேண்டுமென நாங்கள் விழைகிறோம்.

**31.** **நம்முடைய ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான விரிவான புதிய திட்டமொன்றை நாங்கள் வகுத்துள்ளோம். இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 200 கோடி செலவில் 2,500 ஏரிகள் நவீனப்படுத்தப்படும்.** இத்திட்டத்திற்காக வெளி உதவியைப் பெற நாங்கள் மத்திய அரசை அணுக உள்ளோம்.

32. தேசிய நீர் நிருவாகத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் ரூபாய் 6.69 கோடி செலவில் 'சேத்தியாத் தோப்பு பாசன நிருவாகத் திட்டம்' மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் 48,665 ஏக்கர் பயன் அடையும். ரூபாய் ஒரு கோடி செலவில் 6,580 ஏக்கர் பயன் அடையும் வகையில், மருத நதி துணைத் திட்டத்தை நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம், திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்டம், தொழுதூர் பொறிமதகுத் திட்டம், ஆள்யாறு நீர்த் தேக்கத் திட்டம் ஆகியவற்றிற்கு இத்திட்டத்தை நீட்டிப்பது குறித்தும் நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம்.

33. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தின் (EEC) நிதியுதவியுடன் நடைபெற்றுவரும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம்-II, ரூபாய் 15 கோடி நிதி ஆதாரத்தோடு 1991-92 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இத்திட்டம் முடிவடையும் போது, மொத்தம் ரூபாய் 55 கோடி செலவில் 61,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் பயனடையும்.

34. உலக வங்கியின் நிதியுதவியுடன் அணைக்கட்டுப் பாதுகாப்புத் திட்டமொன்று, 5 ஆண்டுகள் கால அளவில், ரூபாய் 41.85 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், பெரியாறு, குடகனாறு, பேச்சிப் பாறை, மணிமுத்தாறு, சாத்தனூர், வீடூர், உப்பாறு, பொன்னியாறு, கோமுகி அணைக்கட்டுகளின் பாதுகாப்பிற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

35. இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டத்தில் மலட்டாறு அணைக்கட்டுத் திட்டத்தை இவ்வாண்டு மேற்கொள்ளவிருக்கிறோம்.

36. பெரியாறு-வைகை திட்டத்தின்கீழ், நீர் வரத்து அணைக்கட்டிற்கும் பேரணை பொறி மதகிற்கும் இடையில், இணைப்புக் கால்வாயை அமைக்கும் பணி விரைவு படுத்தப்படும். ரூபாய் 25 கோடி முதலீட்டிலான இத்திட்டப் பணி, 1993 ஏப்ரல் அளவில் முடிக்கப்படும்.

**37. இவ்வாண்டில் ரூபாய் 2 கோடி செலவில் புதிய சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.** பாசன ஏற்பாடுகளின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான முதலீட்டிற்கு வகைசெய்யும் புதிய திட்டமொன்று தொடங்கப்படும்.

38. பாசன ஆதாரங்களின் பராமரிப்பும், பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பும் மன நிறைவளிப்பதாக இல்லை. அவற்றை நல்ல முறையில் பராமரிக்க அதிக நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. நீர் ஆதாரங்கள் அரிதாக உள்ள இச்சூழ்நிலையில், நீரைப் பயன் படுத்துவோருக்கு உரிய கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டும். குடிமராமத்துப் பணிகளை மேற்கொள் வதற்கு உழவர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டி யிருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் விரிவாக ஆய்வு செய்து, பாசன ஆதாரங்கள் அனைத் தையும் பராமரிப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யக் கருதியுள்ளோம்.

### காடுகள்

39. தற்போது இருக்கின்ற வனச் செல்வங் களைப் பாதுகாத்து மேம்படுத்துவதுடன், காடுகளை விரிவுபடுத்தும் புதிய திட்டங்களையும் நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். குறிப்பாக, சந்தன

மரம் கடத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டுப் பாதுகாப்புப் பணியை நாங்கள் வலுப்படுத்த உள்ளோம். ரூபாய் 40 இலட்சம் செலவில் நவீன ரகத் துப்பாக்கிகள், தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவை வழங்கப்படும். விறகு மரங்கள் கள்ளத் தனமாக வெட்டப்படுவதைத் தடுக்கும் பொருட்டுத் தற்போது விறகுமரக் கிடங்குகள் நான்கு செயல்பட்டு வருகின்றன. அவற்றுடன், நடப்பாண்டில் புதிதாக மூன்று விறகு மரக் கிடங்குகள் திறக்கப்படும்.

**40.** தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ரூபாய் 60 கோடி மூலதனச் செலவில் எட்டாண்டுகளில் சுமார் 7,500 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடும் பெரிய அளவிலான புதிய திட்டமொன்றை மேற்கொள்ள உள்ளது. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 75,000 ஏக்கரில் காகிதக்கூழ் தயாரிக்கப் பயன்படும் உயர்வகை மரங்களை வளர்க்கும் புதிய திட்டமொன்றைச் செயற்படுத்த உள்ளது. இத்திட்டம் ரூபாய் 85 கோடி செலவில் ஆறாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்க் காடு வளர்ப்புப் பணி ரூபாய் 48 கோடி செலவில் ஏழாண்டு காலத்தில் 45,000 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப் படும். அழிந்து பட்ட காட்டுப் பகுதிகளில் விமானத்தி லிருந்து விதைகளைத் தூவும் பணி ரூபாய் 117 இலட்சம் செலவில் 45,000 ஏக்கர் பரப்பில் மேற் கொள்ளப்படும். இப்புதிய திட்டங்கள், இம் மாநிலத்திலுள்ள வனப் பகுதிகளை விரிவாக்கும் முயற்சிக்குப் பெரிய அளவில் ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வண்டலூரில் உள்ள வன ஆராய்ச்சி நிறுவனம், இப்பெரும் முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் வலுப்படுத்தப்படும்.

**41.** 'சிடா' (SIDA) நிதியுதவியுடன் செயல் படுத்தப்படும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்-II தொடர்ந்து செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் ரூபாய் 19.55 கோடி மூலதனச் செலவில் 41,500 ஏக்கர் பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்படும். மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் இவற்றின்கீழும், ரூபாய் 4.45 கோடி செலவில் சுமார் 9,500 ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புத் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் படும். விவசாயிகள் அவர்களுடைய சொந்த நிலங்களில் மரங்களை வளர்ப்பதற்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

### கால்நடைச் செல்வம்

**42.** கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், கால்நடைகளுக்கு மருத்துவப் பணிகளைச் சிறப்பான முறையில் வழங்கவும் நாங்கள் தனிக் கவனம் செலுத்து வோம். தற்போது உள்ள மொத்தம் 3,063 கால்நடை மருந்தகங்கள் மற்றும் துணை நிலையங் களில், 1,936 நிலையங்களில் மட்டுமே உறைவிந்து செயற்கை இனவிருத்தி வசதிகள் உள்ளன. இதுவரையில் இவ்வசதிகளைப் பெற்றிராத 1,127 நிலையங்களுக்கும் இந்த ஆண்டில் ரூபாய் 1.57 கோடி செலவில் இவ்வசதிகள் செய்து தரப்படும். ஈச்சங்கோட்டை, ஹோசூர் ஆகிய இடங்களில், உறைவிந்து உற்பத்தி செய்யப்படும் வசதிகள், ரூபாய் 7.05 கோடி செலவில் அதிகரிக்கப்படும். மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள உறைவிந்து சேமிப்பு வங்கிகள் மூலமாக உறைவிந்து வழங்கும் ஏற்பாடு உருவாக்கப்படும்.

**43.** நடப்பாண்டில் புதிதாக இருபது கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்படும். தற்போதுள்ள 10 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்படும். கால்நடை மருந்தகங்களுக்கும் கால்நடை மருத்துவ மனைகளுக்கும் மருந்துகள் வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தப்படும்.

**44.** **தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன், ரூபாய் 78.48 கோடி செலவில் செயல் படுத்தப்படுகிற பால்பெருக்கத் திட்டம் III-ன் கீழ், சென்னைக்கருகே சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறனுடன் கூடிய புதிய பால் பண்ணை ஏற்படுத்தப்படும்.** வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், மதுரை, அம்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பால்பண்ணைகள் விரிவுபடுத்தப்படும். இரண்டு புதிய பால் குளிரவைக்கும் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். தற்போதுள்ள 14 நிலையங்கள் விரிவுபடுத்தப்படும். பால் குளிரவைக்கும் நிலையங்களில் தற்போது கையாளப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு 15.87 இலட்சம் லிட்டர் ஆகும். இந்த அளவு 1994 இறுதிக்குள் நாளொன்றுக்கு 28.41 இலட்சம் லிட்டர் பாலாக அதிகரிக்கப்படும். இதனால் 18 இலட்சம் விவசாயிகள் பயனடைவர். பால் உற்பத்தி குறையும் கோடை காலங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கிடைக்க நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். **காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூபாய் 4.90 கோடி செலவில் ஒரு புதிய பால் பண்ணை தொடங்கப்படும்.**

**45.** சேலம், தருமபுரி, தென்னார்க்காடு, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டங்களில் செம்மறியாடு வளர்ப்புத்திட்டம் தொடரப்படும். புதுக்கோட்டைப் பகுதியில் டேனிடா உதவியுடன் செயற்படுத்தப்படுகின்ற தீவிரக் கால் நடை வளர்ப்புத் திட்டமும் தொடர்ந்து நிறை வேற்றப்படும்.

**மீனளம்**

**46.** செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் கூட்டுறவு முறையில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் (NCDC) நிதியுதவி யுடன், ரூபாய் 11 கோடி செலவில் புதிய ஒருங் இணைந்த கடல் மீனள மேம்பாட்டுத் திட்ட மொன்றைத் தொடங்கவுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் 6,050 மீனவர்களுக்குக் கட்டுமரங்கள், மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள், மீன்பிடி சாதனங்கள் ஆகியவை வழங்கப்படும். தனியார் மீனவர்கள் மீன் குஞ்சுகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் புதிய திட்டமொன்று இவ்வாண்டில் செயற்படுத்தப்படும்.

**47.** இம்மாநிலத்தில் உவர்நீர் இறால் வளர்ப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நாங்கள் விரிவாக ஆய்வு செய்ததில், கடந்த இரண்டாண்டுகளில் இதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலம் பயன்படுத்தப்படாமல் உள்ளது என்றும் தெரிய வருகிறது. இம்மாநிலத்தில் அதிக அளவில் இறால் மீன் வளர்க்க பெரிய நிறுவனங் களை க்குவிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

இத்துடன், சிறு உழவர்கள் இறால் வளர்ப்பை மேற்கொள்ள உதவும் பொருட்டு, மீன் வளர்ப்புப் பண்ணை ஒன்றை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தேவையான அடிப்படை வசதிகளுடன் ஏற்படுத்த உள்ளோம்.

**48.** நடப்பாண்டில் ரூபாய் 3.2 கோடி செலவில் 2,000 வீடுகள் மீனவர்களுக்கு இலவசமாகக் கட்டித் தரப்படும். நடப்பாண்டில் 10 மாதிரி மீன்பிடிக் கிராமங்கள் ஏற்படுத்தப்படும். கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறக்க நேரிடும் மீனவரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 15,000லிருந்து ரூபாய் 21,000 ஆக உயர்த்தப்படும்.

**49.** *நம் மீனவர் நலனுக்காகக் கச்சத்தீவை மீண்டும் பெற மத்திய அரசிடம் வலியுறுத்துவோம். சென்னையில் கடல்வாழ் உயிரின அரும்பொருள் காட்சியகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்த ஆய்வு ஒன்றை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம்.*

## ஊரக வளர்ச்சி

**50.** *எங்களது தேர்தல் அறிக்கையில் நாங்கள் உறுதி கூறியுள்ளவாறு,* நடப்பாண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை நாங்கள் தொடங்க உள்ளோம். தற்போதுள்ள நிதி ஆதாரங்களையும் கூடுதல் நிதி ஆதாரங்களையும் சேர்த்து, 1992 செப்டம்பருடன் முடிவடையும் அடுத்த ஓராண்டில், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கிடைக்க நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.

51. ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க இந்த சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் பின்வரும் பணித் திட்டங்கள் அடங்கும்.

* ஊரகக் குடிநீர் வழங்கல்
* கிராமச் சாலைகள்
* தெருவிளக்குகள்
* தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்
* பாசன ஏரிகளைப் புதுப்பித்தல்
* சத்துணவு மையங்களைக் கட்டுதல்
* தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குதல்

இவற்றில் குடிநீர் வழங்கல், சாலைகள், தெருவிளக்குகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

52. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 60 கோடி உட்பட, இவ் வரவு-செலவுத் திட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் இத் திட்டத்திற்கு ரூபாய் 192 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. இதே அளவுத் தொகை ரூபாய் 192 கோடி அடுத்த நிதி ஆண்டான 1992-93ஆம் ஆண்டில் வழங்கப்படும். அனைத்து ஊரகப் பகுதிகளிலும் திட்டமிட்ட முறையில் அடிப்படை பணிகளை இத்திட்டம் நல்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

53. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளூர் சாலைகளைப் பராமரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை ரூபாய் 5.32 கோடியிலிருந்து ரூபாய் 9 கோடியாக

உயர்த்தியுள்ளோம். கைப்பம்புகள், விசைப் பம்புகளைப் பராமரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை இவ்வாண்டில் ரூபாய் 0.75 கோடியிலிருந்து ரூபாய் 3 கோடியாக உயர்த்தியுள்ளோம். அனைத்து அடிப்படை வசதிகளும் சரிவரப் பராமரித்து வரப்படுவதுடன், அவை நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறோம்.

## ஊரகத் தொழில்கள் துணைத் திட்டம்

**54.** நம் மக்கள் தொகையில் சுமார் 66 சதவீதத்தினர் தொடர்ந்து கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய வருமானத்தைப் பெருக்க நாம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. வேளாண்மையிலும், அதனைச் சார்ந்த பணிகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, கிராமப் பகுதிகளில் வளமான வாழ்வு ஏற்பட இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் படம் பிடித்துக் காட்டுவனவாக இருந்தபோதிலும், இப்பகுதிகளில் உள்ள உழவுத் தொழில் சாராத பிற மக்களின்பாலும் நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக ஊரகத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் குறித்து முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளது.

**55.** மாநிலக் கதர்—கிராமத் தொழில் வாரியம், தொழில் துறை ஆணையரகம், ஊரக வளர்ச்சி ஆணையரகம், மீனள ஆணையரகம், பட்டுப்புழு வளர்ப்பு இயக்ககம், சமூக நல இயக்ககம், கைத்தறி—துணித்தொழில் இயக்ககம் போன்ற பல்வேறு துறைகள் இந்த ஊரகத் தொழில்கள் சார்ந்த பணிகளை மேற்கொண்டுள்ளன. இவைகளுக்கிடையே

முறையான ஒருங்கிணைப்பும் தொடர்பும் ஏற்படுத்துவது பற்றி நாம் கவனிக்க வேண்டியுள்ளது. கிராமத் தொழில்களில் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கான முயற்சியையும் வலுப்படுத்த வேண்டியுள்ளது. கடன் வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டியுள்ளது. இத்துறையில் கூடுதல் வேலைவாய்ப்பு கிட்டப் பெரும் வாய்ப்பு உள்ளது. இது தொடர்பான பிற பணிகளும் பெருமளவிற்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் தன்மையுடையவை. மொத்தத்தில், கிராமப் பகுதிகளில், ஊரகத் தொழில்களும், அவை தொடர்பான பிற பணிகளும், பெருமளவிற்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் தன்மையுடையவையாக உள்ளன.

**56.** கிராமப் பகுதிகளில் ஊரகத்தொழில்களையும், அவை தொடர்பான பிற பணிகளையும் மேற்கொள்ள ஒரு புதிய துணைத் திட்டத்தைத் தொடங்க நடவடிக்கை எடுக்க உள்ளோம். இந்தத் துணைத் திட்டம், அனைத்துத் துறைகளின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து ஒரு இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பை நல்கும். இந்தத் துணைத் திட்டத்தைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்பிடம் ஒப்படைக்க உள்ளோம். கதர் வாரியம், கூட்டுறவு சங்கங்கள் இவற்றின் மூலம் தக்க விற்பனை ஏற்பாடுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புக் குறித்து ஆய்வு செய்ய உள்ளோம். இந்த துணைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கப் போதிய நிதி ஒதுக்கப்படும். இந்தத் துணைத் திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 621 கோடிக்கான ஒரு கடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**57.** தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளில் நாள்தோறும் ஏற்பட்டு வரும் புதுமைகளைக் குறித்து உறுப்பினர்கள் நன்கு அறிவர். தொழில் நுட்பவியலின் முன்னேற்றத்தை நாங்கள் கவனத்தில் கொண்டு, 'நேபார்டு' நிதியுதவியுடன் அடுத்த 10 ஆண்டுகளில் 75,000 கைத்தறிகளைப் படிப்படியாக விசைத்தறிகளாக மாற்றுவதென முடிவு செய்துள்ளோம். நடப்பாண்டில் இந்தப் பெருந்திட்டத்திற்கான தொடக்கப் பணிக்கு ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**58.** அதே சமயத்தில் 50,000 கைத்தறிகளை நவீனப்படுத்தும் 5 ஆண்டுப் பெருந் திட்டம் ஒன்றையும் ரூபாய் 42.30 கோடி செலவில் நாங்கள் தொடங்க உள்ளோம். இந்த மேம்படுத்தப்பட்ட கைத்தறிகள், நெசவாளர்களுக்கு அதிக வருவாய் ஈட்டித்தரும்.

**59.** கோ-ஆப்டெக்ஸ், ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் தள்ளுபடித் தொகைக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இவ்வாண்டில் ரூபாய் 42 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

**60.** பன்னிரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம் ரூபாய் 26.28 கோடி முதலீட்டில் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி உதவியுடன் நவீனப்படுத்தப்படும். இதற்காக நாங்கள் ரூபாய் 7 கோடியைப் பங்கு மூலதனமாக ஒதுக்கியுள்ளோம்.

61. இந்த ஆண்டில் நெசவாளர்களுக்குத் தறி நெசவுக் கூடம் இணைந்த வீடுகள் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 2,000 வீடுகள் கட்டப்படும். 'ஹட்கோ' (HUDCO) உதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இப்பணிக்கு ரூபாய் 5 கோடி செலவிடப்படும். நெசவாளர் ஒருவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்திற்கு ரூபாய் 10,000 முறைப்படி வழங்கப்படுகிறது. இத்தொகையை நாங்கள் உடனடியாக் ரூபாய் 15,000 ஆக உயர்த்த இருக்கிறோம்.

## கடன் திட்டம்

62. வெவ்வேறு துறைகளில் பல்வேறு திட்டங்களையும், திட்டப் பணிகளையும் அரசு செயல்படுத்தி வருகிறது. பயன்களை முழுமையாகப் பெறும் வகையில், கடன் வழங்கு ஏற்பாட்டுடன் வேறு பல அம்சங்களும் உரிய வகையில் இணைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. 1991-92ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2,139 கோடிக்கு கடன் வழங்கு திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். வேளாண்மை, அதற்குத் தொடர்புடைய நடவடிக்கைகள், தொழில் பணிகள் மற்றும் முன்னுரிமைத் துறைகளில் உள்ள பணிகள் அனைத்தையும் இத்திட்டம் நிறைவேற்றும். பல்வேறு திட்டங்களின்கீழ் தங்கு தடையின்றிக் கடன் வழங்கப்பட இயலும் வகையில், வங்கிகள், கடன் வழங்கு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் உரியவாறு ஒருங்கிணைப்பும், ஒத்துழைப்பும் நிலவ நாங்கள் நடவடிக்கை மேற்கொள்வோம். கடன் வழங்கு ஏற்பாடு தடையின்றிச் செயல்பட்டு வருவதற்கு ஏதுவான புதிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தர உள்ளோம். முன்னுரிமை கொண்ட துறைகளுக்குத்

தடையின்றிக் கடன் வழங்கப்படுவதற்கு உரிய ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்வது எங்களது முயற்சியாக இருக்கும்.

## மின் விசை

**63.** புனல் மின் உற்பத்திக்கான நீர்த் தேக்கங்களில் நிலைமை தற்பொழுது மன நிறைவளிப்பதாக உள்ளது. இதன் பயனாகப் பெருந் தொழில்களின் தேவையில் மின்வெட்டு மட்டுமே மிகச் சிறிய அளவிற்கு தொடரப்பட்டுள்ளது. மற்றபடி மின் வெட்டை முழுவதுமாக ஏற்கெனவே நீக்கியுள்ளோம். இந்த ஆண்டு மின் வெட்டு இல்லாத ஆண்டாக இருக்கும் என்று நம்புகிறோம்.

**64.** இந்த மகிழ்ச்சிகரமான நிலைமை, நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாமை ஆகிறது. தமிழ்நாட்டின் மின் தேவையளவில் நிரப்ப வேண்டிய பற்றாக்குறை அளவு கி.பி. 2000ஆம் ஆண்டில் 4,293 மெகாவாட் ஆகவும், 1995ஆம் ஆண்டில் 1,707 மெகாவாட் ஆகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. பெரும் அளவிலான இந்தப் பற்றாக் குறையை நிறைவு செய்தாக வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இந்தக் கூடுதலான புதிய மின் உற்பத்தித் திட்டங்களை உருவாக்க, விரைவாகத் திட்ட மிட்டுச் செயல்படுத்த வேண்டியது இன்றியமையாதது ஆகிறது. நடைபெற்று வரும் திட்டங்கள் மூலம் 1995ஆம் ஆண்டில் மேலும் 818 மெகாவாட் மின் சக்தி கிடைக்கும் எனவும், அதன் பிறகும் பெரும் பற்றாக்குறை இருக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

**65.** நெய்வேலியில் முதல் சுரங்கத்தை விரிவு படுத்தும் பணியும், அதன் மூலம் 420 மெகாவாட் மின் உற்பத்தி கூடுதலாகப் பெறுவதற்கான பணியும், ரூபாய் 2,500 கோடி செலவில் தொடங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது என்பதை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். *பழுப்பு நிலக்கரி மட்டுமே இம்மாநிலத்தில் கிடைக்கக் கூடிய எரி பொருளாக இருப்பதால், இந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கக் கூடிய எரிசக்தி முழுவதையும் தமிழ் நாட்டிற்கே ஒதுக்குமாறு மத்திய அரசை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம்.*

**66.** *இந்நிலைமையை நாங்கள் கவனமாக ஆய்வு செய்ததில், ஜெயங்கொண்டம் பகுதியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்யும் பணியில் கூட்டுத் துறையைப் பங்கு கொள்ள அனுமதிக்குமாறு மத்திய அரசை அணுகியுள்ளோம். ரூபாய் 5,000 கோடி செலவில் 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இந்த ஒருங்கிணைந்த சுரங்கப்பணி—மின் உற்பத்தித் திட்டம், அடுத்த பத்தாண்டுகளில் இம் மாநிலத்தின் மின் தேவையை நிறைவு செய்யும். இந்தத் திட்டத்தை விரைவில் தொடங்க மத்திய அரசுடன் கலந்தாலோசித்து அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.*

**67.** புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் அனைத்தையும் மேற்கொள்ள, புதிய மின் உற்பத்திக் கழகம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம். *காவிரி ஆற்றுப் பகுதியில் கிடைக்கும் எரிவாயு அடிப்படையில் 300 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை அது உடனடியாக மேற்கொள்ளும். வடசென்னையில்*

500 மெகாவாட் மின் உற்பத்திக்கான புதிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணியை ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் மேற்கொள்ள விருக்கிறோம்.

**68.** கூடங்குளம் அணு மின் உற்பத்தி திட்டப் பணியை விரைவுபடுத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வோம். இத்திட்டம் கி.பி. 2001ஆம் ஆண்டில் 2,000 மெகாவாட் மின் உற்பத்தியை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**69.** மரபு சாராத மின் உற்பத்தி ஆதாரங்கள் அனைத்தையும் மேம்படுத்த ஊக்கம் அளித்து வருகிறோம். சூரிய வெப்பச் சக்தி, காற்றுச் சக்தி ஆகியவற்றைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு அமைப்புக்கு நிதி வழங்கப்படும்.

**70.** புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கான ஆதாரங்களைப் பெருக்க இம்மாநிலத்தில் மின்விசை-அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி நிறுவனத்தை இப்போது ஏற்படுத்தியுள்ளோம்.

**71.** மின் உற்பத்திக்கான ஆதாரங்களைப் பெருக்கும் போது, பெரும் இடையூறுகள் இருந்த போதிலும், நடப்பாண்டில், புதிதாக 40,000 மின் இணைப்புகள் வழங்கவுள்ளோம் என்பதை அறிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதே போல, நடப்பாண்டில் 40,000 குடிசைகளுக்கு இலவசமாக மின் இணைப்பு அளிக்கவுமுள்ளோம்.

**72.** நடப்பாண்டில் மின் விசை மேம்பாட்டுக்குரிய மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 425.65 கோடியாகும். இத்துடன் மின் விசை நிதி நிறுவனத்திடமிருந்து பெற

இருக்கின்ற உதவியையும் சேர்த்து, இவ்வாண்டு மின் விசை மேம்பாட்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 577.79 கோடி என்ற அளவில் இருக்கும்.

**73.** விவசாயிகள் அனைவருக்கும் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது என்பதை அவை உறுப்பினர் அறிவர். இதனால், ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு சுமார் ரூபாய் 550 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த ஆண்டில் இந்த வருவாய் இழப்பை ஈடு செய்வதற்காக ரூபாய் 350 கோடி ஒதுக்கியுள்ளோம். மாநில அரசின் நிதி நிலையைக் கருதிப் பார்க்கையில், ரூபாய் 250 கோடி மட்டும்தான் எங்களால் வழங்க இயலும். இந்நிலையில், தமிழ்நாடு மின் வாரியம் புதிய திட்டங்களை மேற்கொள்ள இயலாமல் போய்விடும். மின் உற்பத்தி நிதி நிறுவனம், ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற கடன் வழங்கும் நிறுவனங்கள், விவசாயிகளிடமிருந்து ஏதாவது ஒரு குறைந்த தொகையாவது வசூலிக்க வேண்டியது அவசியம் ஆகும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப் படுவதைக் கண்காணிக்க வேண்டுமெனவும் அவை வலியுறுத்தியுள்ளன. மிகவும் சிக்கலான இப் பிரச்சனைகள் குறித்து விரிவாக விவாதித்து ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

## தொழில்கள்

**74.** இவ்வரசு, தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்து, இந்தியாவிலேயே தொழில்துறையில் முன்னேற்றம் அடைந்த முதல் மாநிலமாகத் தமிழ்

நாட்டை மாற்றிடப் பாடுபடும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 1991ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 6ஆம் நாளன்று தொழிலதிபர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெளிப்படையாகவும் எவ்வித நிபந்தனைகளுமின்றியும் அமைந்ததை யொட்டி, இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி விரைந்து ஏற்படுவதற்குரிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

**75.** தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு குறைந்து வருகிறது. நாட்டின் மொத்த முதலீட்டில் தமிழ்நாட்டில் 8 சதவீத அளவில் இருந்த மத்திய அரசின் முதலீடு, தற்போது 5 சதவீதமாகக் குறைந்துள்ளது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின் முதலீடு, மிக அவசியமானது. கீழ்க்கண்ட திட்டங்களுக்கு உடனடியாக அனுமதி யளித்து, நிறைவேற்றுமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம்:—

* ரூ. 1,433 கோடி செலவில் நேஷனல் அரோமேட்டிக் திட்டம் (NAPCO).
* "பாம்பே ஹை" பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டுவர தென்மாநிலங்களுக்கான எரிவாயு இணைப்பு அமைக்கும் திட்டம்.
* ரூ. 250 கோடி செலவில் இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் நிறுவனம் வண்ணப் படச்சுருள் தயாரிக்கும் திட்டம்.
* சேலத்தில் ஒருங்கிணைந்த உருக்கு ஆலை அமைக்கும் திட்டம்.
* மணலியிலுள்ள சென்னை உரத் தொழிற் சாலையை ரூபாய் 314 கோடி செலவில் நவீனப்படுத்துதல்.

**76.** புதிய வர்த்தகக் கொள்கையையும், புதிய தொழில் கொள்கையையும் மத்திய அரசு அறிவித்துள்ளது. அயல்நாட்டுத் தொழில் முதலீட்டாளர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காகவும், அவர்களது முதலீடுகளுக்கு விரைந்து அனுமதி அளிப்பதற்காகவும், அயல்நாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய முதலீடுகளில் தமிழ் நாட்டிற்கு உரிய பங்கு கிடைக்க நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**77.** இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கான புதிய கொள்கை ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். அக்கொள்கையின் சிறப்பு அம்சங்களாவன :—

ரூபாய் 50 கோடி முதல் ரூபாய் 100 கோடி வரை முதலீடு செய்யும் புதிய தொழில்களுக்கு ரூபாய் 25 இலட்சம் மூலதன உதவித் தொகை அளிப்பது ; 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்வது அல்லது 10 ஆண்டுகளுக்கு விற்பனை வரி வசூலிப்பதை தள்ளி வைப்பது ; ரூபாய் 100 கோடிக்கும் அதிகமான முதலீடு செய்யும் புதிய தொழில்களுக்கு ரூபாய் 50 இலட்சம் மூலதன உதவித் தொகை அளிப்பது; விற்பனை வரியை 6 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்வது அல்லது விற்பனை வரி வசூலிப்பை 12 ஆண்டுகளுக்குத் தள்ளி வைப்பது. இம்மாநிலத்தில் புதிய பல பெருந்தொழிற் பிரிவுகள் ஏற்பட இது வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

**78.** தமிழ் நாட்டை விரைவாகத் தொழில் வளர்ந்து செழிக்கும் மாநிலமாக ஆக்குவதற்காக

இவ்வரசு, கீழ்க்கண்ட சில முக்கிய அம்சங்களைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு தொழில் வளர்ச்சிப் பணிகளைச் செயற்படுத்தும் :—

* தொழில்களுக்குப் பல்வகையிலும் சிறப்பான ஊக்கங்கள் அளித்தல்.
* ஊக்க உதவித் தொகைகளை உடனுக்குடன் வழங்குதல்.
* போதுமான அளவிற்கு அடிப்படைவசதிகள் செய்து தருதல்.
* தொழிலதிபர்கள் நட்புணர்வோடு எளிதாக செயல்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்.
* தொழில் மேம்பாட்டிற்கு உகந்த, தொழில் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் அமைந்த வரி ஏற்பாட்டினைப் பின்பற்றுதல்.
* மும்முர வளர்ச்சி காணவேண்டிய தொழில் துறைப் பகுதிகளை இனங் கண்டறிதல்.
* ஏற்றுமதி வாய்ப்பு மிக்க தொழில்களை உருவாக்குதல்.
* தொழில் நுட்பவியலின் நிலையை உயர்த்துதல்.

**79.** இம்மாநிலத்தில் தொழில்கள் விரைவாக வளர்ந்து செழித்தோங்கச் செய்வதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் **(TIDCO)** இவ்வாண்டில் 9 திட்டங்களை ரூபாய் 600 கோடி மொத்தச் செலவில் தொடங்க ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) இவ்வாண்டில் ரூபாய் 225 கோடி அளவிற்குக் கடன் வழங்கவிருக்கிறது. தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) ரூபாய் 70 கோடி அளவிற்கு தொழில்களுக்குக் கடன் வழங்கும். சில

முக்கியத் தொழில்களில் விரைவாக வளர்ச்சி பெறுவதற்கான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. தேவையான அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கு நாங்கள் தனி முக்கியத்துவம் அளிப்போம்.

**80.** சிறு தொழில்களுக்கான புதிய திட்டம் ஒன்றை மத்திய அரசு அறிவித்துள்ளது. சிறு தொழில்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி நாங்கள் விரிவாக ஆய்வு செய்துள்ளோம். நலிந்த சிறு தொழில்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட மாநில உயர் நிலைக் குழுவை நாங்கள் உடனடியாக முடுக்கி விட்டு, அந்தச் சிறு தொழில்கள் மீண்டும் இயங்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகளைத் திறம்பட எடுப்போம். இது தொடர்பான பிரச்சினைகளில் விரைந்து முடிவு எடுப்பதற்கு இக்குழுவுக்கு அதிகாரம் வழங்கியுள்ளோம். சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவையான அளவிற்கு கடன் கிட்டாதிருக்கும் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், தொகை பெறாதிருக்கும் பொருட்பட்டியலின் மீது பணம் பெறும் வசதிகளை (Factoring Services) ஊக்குவிப்போம். தொழில் நுட்பவியலை மேம்படுத்த நாங்கள் சிறப்பு முக்கியத்துவம் கொடுப்போம். இத்துறையில் நவீனத் தொழில் நுட்பவியலை மேன்மேலும் மேற்கொள்வதை ஊக்குவிக்க இருக்கிறோம்.

### சாலைகள்

**81.** நம்து சாலைகளைத் தகுந்த அளவு பராமரிக்காமல் விட்டதன் காரணமாக, அவற்றின் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. சாலைகளைப் பராமரிப்பதற்கு 1989-90ஆம் ஆண்டில்

ரூபாய் 59.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 1990-91ஆம் ஆண்டில் ரூபாய் 70.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நடப்பு ஆண்டில் இதற்கு ரூபாய் 102.25 கோடி மொத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிகவும் மோசமான நிலையிலுள்ள, சுமார் 8,000 கிலோமீட்டர் நீளத்துக்கான சாலைப் பகுதிகளை ரூபாய் 150 கோடி செலவில் செப்பனிடும், ''சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டம்'' ஒன்று ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்படும். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**82.** ஊரக அங்காடிச் சாலைகளை மேம்படுத்துவதற்குரிய சிறப்புத் திட்டமொன்று, ரூபாய் 45·28 கோடி செலவில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். அதன் கீழ், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வடஆர்க்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களிலுள்ள 19 அங்காடி மையங்களை இணைக்கும் 800 கிலோமீட்டர் தொலைவுடைய சாலைகள் மேம்படுத்தப்படும்.

**83.** தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சாலைகளை மேம்படுத்துவதில், தொழில் நிறுவனங்களை ஈடுபடுத்தும் விரிவான செயற்குறிப்பு ஒன்றை நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம். இத்திட்டத்தின்கீழ் சாலை மேம்பாட்டுப் பணியில் முதலீடு செய்யும் தொழிலதிபர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குச் சிறு தொகையைச் சுங்கக் கட்டணமாக வசூலிக்க அனுமதிக்கப்படுவர். இதன் மூலம் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில் ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த எண்ணியுள்ளோம். சர்க்கரை ஆலைப்பகுதிகளில் விரிவான சாலை மேம்பாட்டுத் திட்டமொன்று ரூபாய் 16.5 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**84.** சென்னையிலிருந்து கடலூருக்குச் செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலையை மொத்தம் ரூபாய் 53 கோடி செலவில் அமைக்கும் பணி இப்போது தொடங்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுமாறு மத்திய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். ஏனெனில், இது பூகோள அமைப்பு ரீதியாக மிகுந்த முக்கியத்துவம் உடையது என்பதுடன், இது ஒன்று மட்டுமே இதுவரையில் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்படாமலிருக்கும் கடற்கரைச் சாலையாகும்.

**85.** ஓசூர்-கிருஷ்ணகிரிக்கு இடையேயும், திண்டுக்கல்-மதுரைக்கு இடையேயும், நான்கு தட தேசிய நெடுஞ்சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

## சுற்றுச் சூழல்

**86.** நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியே எங்களது குறிக்கோளாகும். சுற்றுச் சூழலைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். தண்ணீர் மாசுபடுவதைத் தடுக்கத் தனி முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

**87.** தொழிற்சாலைகளுக்குக் கழிவுநீர் தூய்மைப் படுத்தும் பொது நிலையம் நிறுவும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தோல் பதனிடு தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் பொது நிலையம் நிறுவும் பணி விரைவுபடுத்தப்படும். புதிதாகத்

ப்பம்மல், ஈரோடு ஆகிய இடங்களில் தோல் பதனிடு தொழிற்சாலைக் கழிவுப் பொருள்களைத் தூய்மைப் படுத்தும் பொது நிலையங்கள் நிறுவப்படும். இதே போன்று, கரூர், பவானி, அய்யம்பேட்டை, திருப்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் சாயத் தொழிற்சாலைகளி லிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் பொது நிலையங்கள் ரூபாய் 18 கோடி செலவில் நிறுவப்படும்.

**88.** சென்னை மாநகரில் உள்ள முக்கிய நீர் வழிகள், அதாவது, அடையாறு, கூவம் ஆகிய ஆறுகள், பக்கிங்ஹாம் கால்வாய், முக்கிய கழிவுநீர் கால்வாய்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள தூய்மைக் கேட்டினை உறுப்பினர்கள் நன்கறிவர். தூய்மைப்படுத்தப்படாத கழிவுநீர் நேரடியாக இந்த நீர்வழிகளில் வந்து விழுந்து கலப்பதால், 80 சதவிகிதம் தூய்மைக்கேடு ஏற்படுகிறது. சென்னை குடிநீர் வாரியம் ரூபாய் 6.50 கோடி செலவிலான கழிவுநீர் தூய்மைப்படுத்தும் திட்டத்தை, 1991 டிசம்பருக்குள் முடிக்கவிருக்கிறது. இக்காலகட்டத்தில், இப்பணி நிறைவேற்றப்படுவதன் மூலம் பெரிய அளவிலான தூய்மைக்கேடு தடுக்கப் பட்டு விடும். அதன் பின்னர், இந்த நீர்வழிகளில் தூர் வாரப்பட வேண்டும். தூர்வாரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள நாங்கள் இங்கிலாந்து நாட்டின் 'அயல் நாடுகள் மேம்பாட்டு நிருவாக அமைப்பின்' உதவியை நாடியுள்ளோம்.

**89.** காவிரி ஆற்றில் தூய்மைக்கேடு ஏற்படு வதைத் தடுக்க நாங்கள் விரிவான அறிக்கை ஒன்றை ஆய்வு செய்து வருகிறோம். அனைத்து நாட்டுச்

சுற்றுச் சூழல் கண்காணிப்பு திட்டத்தின் கீழ், ஆற்றில் தூய்மைக்கேடு ஏற்படுவதைக் கண்காணிக்க, காவிரி ஆற்றின் நெடுக நான்கு நிலையங்களைத் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் ஏற்படுத்தியுள்ளது. காவிரி ஆற்றின் கரைகளில் உள்ள 35 நகரங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரும், 1,139 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களும் காவிரி ஆற்று நீருக்குப் பெருத்த அளவில் தூய்மைக் கேட்டினைச் செய்வதாக உள்ளன என்று மதிப்பிடப் பட்டுள்ளது. காவிரி ஆற்று நீர் தூய்மைக்கேடு அடைவதைத் தடுக்கும் பெரும் திட்டத்திற்கு ரூபாய் 251 கோடி முதலீடு தேவைப்படும். கங்கை நீர்த் தூய்மைக்கேடு தடுப்புத் திட்டத்திற்கு நிதியுதவி யளிப்பது போலவே, இத்திட்டத்திற்கும் முழு நிதியுதவி அளிக்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்த உள்ளோம்.

**90.** மோட்டார் வண்டிகள் வெளியிடும் கழிவுப் பொருள்களால் காற்றுத் தூய்மை கெடுவதைக் கண்காணிக்கத் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக அவசியமான விதிமுறைகள் வகுக்கப்படும்.

**91.** 'ஹட்கோ', மத்திய அரசு ஆகியவற்றின் உதவிபெறும் குறைந்த செலவிலான ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டத்தின் கீழ் எஞ்சிய 41 நகராட்சிகளில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள முடிவு செய்துள் ளோம். இத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் உலர் கழிப்பிடங்கள் ரூபாய் 55 கோடி செலவில் நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றப் படும். இத்துடன் அனைத்து நகராட்சிகளிலும் உள்ள ஏறத்தாழ 4 இலட்சம் உலர் கழிப்பிடங்கள் இவ்வாறு மாற்றப் படும்.

## குடிநீர் வழங்கல்

**92.** மாநிலத்தோர் அனைவர்க்கும் போதுமான அளவிற்குக் குடிநீர் வழங்குவோம் என்று நாங்கள் உறுதியளித்துள்ளோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமையும் உயர் அதிகாரக் குழு, குடிநீர் வழங்கல் குறித்தத் திட்டங்களின் செயல்பாட்டைக் கண்காணிக்க இருக்கிறது.

**93.** இதுவரையில், குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லாமல் 2,483 குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. நடப்பாண்டில், ரூபாய் 10 கோடி செலவில் இந்தக் குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். 1,007 குடியிருப்புகளில் ஆதிதிராவிடர் குடியிருக்கும் பகுதிகளில் மட்டும் இதுவரை குடிநீர் வசதி எதுவும் செய்து தரப்படவில்லை. அத்தகைய ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதியளிக்கத் தனித் திட்டம் ஒன்று ரூபாய் 7 கோடி செலவில் நடப்பாண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும்.

**94.** மாநிலத்தில் 10,118 குடியிருப்புகளுக்குக் கோடை காலத்தில் மிகக் குறைந்த அளவிற்கே குடிநீர் வசதிகள் உள்ளன என்பதை இதுபற்றி நடைபெற்ற விரிவான ஆய்வு தெரிவிக்கிறது. இவை நீர் அரிதாகக் கிடைக்கும் பகுதிகளில் அமைந்துள்ளன. எனவே, இவற்றுக்கு உரிய அளவுக்கு நீர் வழங்கப் புதிய திட்டம் வகுக்கப்பட வேண்டியிருக்கிறது. குடிநீர் வழங்கலுக்கு நாங்கள் அளித்துள்ள முன்னுரிமையைக் கருத்தில் கொண்டு, முக்கியமாக இக்கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க 5 ஆண்டுகால அளவில் செயல்படுத்தக் கூடிய வகையில் ரூபாய் 400 கோடி செலவில் புதிய திட்டமொன்றை வகுத்துள்ளோம். இத்திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரப்படும்.

**95.** 3,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள பெரிய குடியிருப்புப் பகுதிகளில், மேநிலை நீர்த் தொட்டிகள் அமைத்து, குடிநீர் வசதி செய்து கொடுப்பதில் கவனம் செலுத்துவோம். இதுவரை இவ்வசதி 97 குடியிருப்புப் பகுதிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் எஞ்சியுள்ள இத்தகைய 667 குடியிருப்புப் பகுதிகளுக்கு இவ்வசதிகளைச் செய்து கொடுக்க நாங்கள் உறுதி கொண்டுள்ளோம்.

**96.** மத்திய அரசின் முழு மானிய உதவியுடன் விரைவு படுத்தப்பட்ட குடிநீர் வழங்கு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இத்திட்டத்தின்கீழ்த் தமிழ் நாட்டிற்கு வழங்கப்படும் தொகை மிகவும் குறைவானதாக உள்ளது. மத்திய அரசு இதற்கு அதிக நிதி வழங்குமெனில், எங்களால் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த இயலும்.

**97.** இதுவரை அடிப்படை குடிநீர் வசதி 4 நகராட்சிகளிலும், 2 நகரியங்களிலும் செய்து தரப்பட வில்லை. சீர்காழி, பொன்மலை, குளச்சல், பத்மநாபபுரம் ஆகிய 4 நகராட்சிகளில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. கத்திவாக்கம், மாதவரம் நகரியங்களுக்குச் சென்னை மாநகர் குடிநீர் வழங்கு திட்டத்தின் மூலம் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்கான பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**98.** மொத்தம் 366 நகர்ப் பேரூராட்சிகள் உள்ளன. இவற்றில் 245 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 73 நகர்ப் பேரூராட்சிகளில் இப்பணிகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

ஊரகப் பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டங்களின் எண்ணிக்கை மன நிறைவளிப்பதாக இல்லை. மொத்தமுள்ள இத்தகைய 266 பேரூராட்சிகளில், 61 பேரூராட்சிகளுக்கு மட்டுமே இதுவரையில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 91 ஊரகப் பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டத்தில், ஊரக, நகர்ப்புறப் பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கு வசதிகளையும் சேர்த்துள்ளோம்.

**99.** பெரிய அளவிலான குடிநீர் வழங்கும் புதிய திட்டங்களைக் குறிப்பிட்ட தொகுதிகளில் கொண்டு வருவதில் உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவார்கள் என்பதை நாங்கள் அறிவோம். தற்போது இத்திட்டங்கள் மிகவும் செலவு பிடிப்பவையாக உள்ளன. அரசு இப்போது ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் நிதியுதவியையும் 'ஹட்கோ' நிறுவனத்தின் நிதியுதவியையும் பெற்று இத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. உள்ளாட்சி மன்றங்கள், அவற்றின் கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும், அரசு இத்தொகையை திருப்பிச் செலுத்தியாக வேண்டும். இதனால், கடனாகப் பெறும் தொகையும், திருப்பிச் செலுத்தும் தொகையும் ஏறக்குறைய சமமாக இருக்கும் இடர்ப்பாடான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாகப் புதிய திட்டங்களை எடுத்துக் கொள்ள இயலாத நிலை தோன்றியுள்ளது. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து குடிநீருக்குரிய கட்டணங்களை வசூலித்தால் மட்டுமே நிலைமையைச் சமாளிக்க இயலும். எனவே, நகர்ப் பகுதிகளில் குடிநீர்

வழங்கும் பணியைத் தொடர்ந்து ஆற்றுவதற்கு அரசுக்கு உறுப்பினர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**100.** சென்னை மாநகருக்குத் தங்கு தடையின்றி குடிநீர் வழங்குவது முக்கியமான பணியாகும். கிருஷ்ணா நதிநீர் வழங்கு திட்டத்தை விரைவுபடுத்த நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். நடப்பாண்டில் ஆந்திரப் பிரதேசத்திற்குள் நடைபெறும் பணிகளுக்காக ரூபாய் 45 கோடி நிதி ஒதுக்கீடும், தமிழ்நாட்டிற்குள் நடைபெறும் பணிகளுக்காக ரூபாய் 26 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளன. 1993ஆம் ஆண்டு இறுதிக்குள் சென்னைக்கு நீர் கிடைக்கும் வகையில் இத்திட்டத்தின் பணி முன்னேற்றத்தை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். கிருஷ்ணா நீரைத் தகுந்த முறையில் பகிர்ந்தளிப்பதற்குச் சுமார் ரூபாய் 505 கோடி மதிப்பீட்டிலான சென்னை மாநகர நீர் வழங்கல் திட்டத்திற்கு விரைவில் அனுமதி அளிக்குமாறு உலக வங்கியுடன் தொடர்பு கொண்டு கேட்டு வருகின்றோம்.

**101.** இம்மாநிலத்தில் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதைக் கருத்திற் கொண்டு, கழிவு நீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்தும் திட்டத்தில் தனிக் கவனம் செலுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கு வாரியம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கும், சென்னை இரசாயன உர நிறுவனத்திற்கும் நாளொன்றுக்கு 5 மில்லியன் காலன் அளவுக்கு நீர் வழங்கும் திட்டத்தைத் தற்போதுதான் முடித்துள்ளது.

இந்நிறுவனங்கள் இந்நீரைப் பயன்படுத்த மூன்றாம் முறை சுத்திகரிப்பு செய்யும் வசதிகளை ஏற்படுத்தி யுள்ளன. இதுபோன்ற முயற்சிகளுக்குத் தீவிரமாக ஊக்கமளிக்கக் கருதுகிறோம். எக்காலத்திலும், குடிநீர் கடும் பற்றாக்குறை நிலவுகிற பகுதிகளுக்குத் தூய நீரைப் போதுமான அளவிற்கு வழங்க இயலும் வகையில், கடல்நீரை நன்னீராக்கும் நிலையத்தை நிறுவும் பணி குறித்து நடவடிக்கை எடுப்போம். இந்த நிலையங்களைச் சென்னைக் குடிநீர் வாரியமும், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியமும் நிறுவும். நாங்கள் இத்தகைய பெரிய நிலையங்களைப் படிப்படியாக நிறுவுவோம்.

## வீட்டு வசதி

**102.** "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்பது இவ்வரசின் குறிக்கோளாக அமையும். வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருவதில் இன்னும் முடிவுறாமல் உள்ள பணிகளையும், இனிமேல் ஏற்படக்கூடிய புதிய தேவையையும் கருத்திற் கொண்டு, அடுத்த 5 ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள அரசு நிறுவனங்கள் அனைத்தின் செயல்பாட்டையும் மேம்படுத்துவதுடன், அதற்குமேல், தனியார் துறையிலும் வீட்டு வசதி வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குவோம். தற்போதுள்ள வீடுகளை மேம்படுத்துவதற்கான விரைவுத் திட்டம் ஒன்றிற்குத் தனிக் கவனம் செலுத்தப்படும்.

**103.** நடப்பாண்டில் பல்வேறு அரசு நிறுவனங்கள் மூலம் மொத்தம் 1.22 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும். அவையாவன :—

* ஆதிதிராவிடர்களுக்கு அனைத்துப் பருவ நிலைக்கும் ஏற்ற 50,000 வீடுகள்.

* மீனவர்களுக்கு 2,000 வீடுகள்.

* கைத்தறி நெசவாளர்களுக்கு 2,000 வீடுகள்.

* கிராம வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 30,000 வீடுகள்.

* நகர்ப்புற வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 10,000 வீடுகள்.

* தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் 23,000 வீடுகள்.

* தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் 5,000 வீடுகள்.

**104.** அரசு நிறுவனங்கள் மூலம் வீட்டுவசதி ஏற்படுத்தித் தரும் இத்திட்டங்களுடன், தனியார் துறையிலும், கூடுதல் வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகளில் அடிப்படை வசதிகளோடு கூடிய மேம்படுத்தப் பட்ட வீட்டுமனைகள் குறித்தப் பெருந்திட்டம், நகர்ப் புற வளர்ச்சித் திட்டம், நெறிப்படுத்தப்பட்ட வீட்டு வசதிக்காகக் கடன் வழங்கும் திட்டம் முதலியவை அடங்கும்.

**105.** வீடுகளின் நிலை உயர்த்தும் திட்டத்தின்கீழ், 'ஹட்கோ'-வின் நிதியுதவியுடன் நகர்ப்புறங்களில் ரூபாய் 40 கோடி செலவில் ஒரு இலட்சம் வீடுகளின் நிலை உயர்த்தப்படும். **கிராமப் பகுதிகளுக்காக வீடுகளின் நிலை உயர்த்தும் திட்டம் என்ற மாநில அளவிலான புதிய திட்டம் தொடங்கப்படும்.** இத்திட்டத்தின்கீழ், மொத்தம் ரூபாய் 3 கோடி ஒதுக்கீட்டில் கிராமப் பகுதிகளில் 10,000 வீடுகளின் நிலை உயர்த்தப்படும்.

## நகர்ப் பகுதி வளர்ச்சி

**106.** தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 34 சதவீதம் பேர் நகர்ப் பகுதிகளில் வாழ்கின்றனர் என்று 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தொடக்க முடிவுகள் தெரிவிக்கின்றன. நகர்ப் பகுதிகளில் மக்கள் நெருக்கம் பெருமளவிற்கு இருப்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படை வசதிகள் திட்டமிட்ட வகையில் உருவாக்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும். நாள்தோறும் உயர்ந்துவரும் மக்கள் நெருக்கத்தின் அளவிற்கேற்ப நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் வலுப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

**107.** நகராட்சி நகர்ப்பகுதி வளர்ச்சி நிதிக்குக் கூடுதலாக ரூபாய் 15 கோடியை நாங்கள் ஒதுக்கீடு செய்துள்ளோம். அதிக அளவில் நகர்ப் பகுதித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் வகையில் இந்த நிதியைப் பயன்படுத்தும் முறையை நாங்கள் விரிவாக்க இருக்கிறோம். இந்த நிதியின் மூலம் நகராட்சிகளில்

ரூபாய் 20 கோடியில் புதிய திட்டங்களும், சென்னை மாநகராட்சியில் ரூபாய் 30 கோடியில் புதிய திட்டங்களும் அனுமதிக்கப்படும்.

**108.** மாநில நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்ட நிதி, சிறிய நகரங்களிலும் புதிய திட்டப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் வலுப்படுத்தப்படும். மத்திய அரசின் உதவியுடன் திருவத்திபுரம், விருத்தாசலம், பரமக்குடி, திருப்பத்தூர் (வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்), இராசிபுரம், திண்டிவனம், புஞ்சைபுளியம்பட்டி, மாமல்லபுரம் ஆகிய நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப் பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நகரத்திற்கும் ரூபாய் 1.2 கோடி ஒதுக்கீடு என்ற அளவில் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், பேருந்து நிலையம், லாரி நிறுத்துமிடங்கள், அங்காடிகள், சாலைகள் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**109.** ஏழை மக்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படை வசதித் திட்டத்தை நாங்கள் இப்போது தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ்க் குடிநீர் வழங்கல், சாலைகள், விளக்குவசதி, வடிகால் போன்ற அடிப்படை வசதிகளுடன் சுகாதாரப் பாதுகாப்பு, பள்ளி சாராக் கல்வி போன்ற சமூகப் பணிகள் நகர்ப்பகுதி ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும். மத்திய அரசின் நிதியுதவியுடன், 57 நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் மேலும் 42 நகரங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்

படும். நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதற்கு இவ்வரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

## சென்னை மாநகர மேம்பாடு

**110.** சென்னை மாநகருக்குத் தென்னிந்தியாவின் முதன்மைப் பெருநகர் என்னும் பெருமையை மீண்டும் பெற்றுத் தருவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். **சென்னை மாநகரின் வளர்ச்சிக்காக ரூபாய் 1,250 கோடி முதலீட்டில் 5 ஆண்டுகளில் நிறைவேற்றும் பெருந்திட்டமொன்றை நாங்கள் தொடங்கக் கருதியுள்ளோம்.** விரைவில் தொடங்கப்படவிருக்கும் ''எழில்மிகு சென்னை-2000'' என்னும் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் அடங்கும்:

| | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| சென்னை மாநகரக் குடிநீர் வழங்கல்—கழிவு நீரகற்று திட்டம்—சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம் .. .. | 600 |
| மின் வழங்கு ஏற்பாட்டில் சீரமைப்பு .. | 225 |
| போக்குவரத்து ஏற்பாடுகளின் சீரமைப்பு. | 200 |
| மழைநீர் வடிகால்கள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கழிவுப் பொருட்கள் அகற்றும் பணி முதயலிவை உள்ளிட்ட நகராண்மைப் பணிகள் .. .. .. .. | 135 |
| குடிசைப் பகுதி மேம்பாடும், வீட்டு வசதியும் .. .. .. .. | 75 |
| புற நகரங்களை ஏற்படுத்துதல் .. | 15 |
| மொத்தம் .. | 1,250 |

**111.** சென்னை மாநகரின் சுற்றுச் சூழல் மேம்பாடு மற்றும் மாநகரக் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் இறுதியாக்கப் படும். இத்திட்டத்தின்கீழ், கிருஷ்ணா நதி நீரைத் தேக்கி வைத்து வழங்கவும், மாநகரின் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்று ஏற்பாட்டைச் சரி செய்வதற்குமான நீண்டகாலத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

**112.** ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சென்னை மாநகரில் மின் வழங்கல் ஏற்பாட்டை மேம்படுத்துவதற்கான பெருந் திட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாயு காப்பிடப்பட்ட அகத் துணை மின் நிலையங்களை (Indoor gas insulated sub-stations) ஏற்படுத்துவது உட்பட மின் வழங்கல் ஏற்பாட்டுப் பணியை மேம் படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படும்.

**113.** சென்னை மாநகரில் போக்குவரத்து ஏற்பாட்டை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் ரூபாய் 100 கோடி செலவில் அண்ணா சாலையில் ஒரு பகுதி மட்டும் உயர்த்தப்பட்ட நிலையில், பேருந்துகள் மட்டும் செல்லும் மேல் நிலைப் பாதை அமைத்தல், சாலைகள்-மேம்பாலங்கள் அமைத்தல், பேருந்துகள் எண்ணிக் கையை அதிகரித்தல் ஆகிய திட்டங்கள் மேற் கொள்ளப்படும்.

**114.** நகராண்மைப் பணித் திட்டத்தின்கீழ், மழை நீர் வடிகால்களைப்பெருமளவில் மேம்படுத்துதல், தெரு விளக்கு வசதிகள் செய்து கொடுத்தல், கழிவுப் பொருட்களை அகற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**115.** நகரை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான புதிய முயற்சி மேற்கொள்ளப்படும். பெரிய அளவில் மனை-பணிகள் திட்டமும், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டமும் மேற்கொள்ளப்படும்.

### கல்வி

**116.** இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கல்விக்காக மொத்தம் ரூபாய் 1,298.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூபாய் 47.97 கோடியும் அடங்கும்.

**117.** ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் அனைவரும் எட்டாம் வகுப்பு வரையில் படிக்க வேண்டும் என்பதற்கு நாங்கள் முக்கியத்துவம் அளிக்க இருக்கிறோம். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பாதியில் படிப்பை நிறுத்தி விடுகின்ற நிலைமைக்கு நாம் தீர்வு காண வேண்டியிருக்கிறது. இது பற்றி நடத்தப்பட்டுள்ள சில ஆய்வுகள், ஐந்தாம் வகுப்பு வரையில் படித்து வரும் குழந்தைகளில் ஏறத்தாழ 20 சதவீதம் பேர் இடையில் நின்று விடுகிறார்கள் என்று காட்டுகின்றன. **பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் இடையில் படிப்பை நிறுத்தி விடும் நிலையை மாற்றிட "மாநிலப் பள்ளி சாராக் கல்வித் திட்டம்" எனப்படும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க முடிவு செய்துள்ளோம்.** இத்திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான பள்ளிக்குச் செல்லாக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட வழிவகுக்கும். படித்த வேலையற்றோர்க்கு நிவாரணம் அளிப்பதற்கு என்று உள்ள திட்டம் திருத்தியமைக்கப்பட்டு, அத்தகைய இளைஞர்கள், பள்ளி சாராக் கல்வி இயக்கத்திற்குப் பணிபுரியும் வகையில் அணி திரட்டப்

படுவர். படித்த வேலையற்ற இளைஞர் ஒவ்வொருவரும் ஓராண்டில் 10 குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்குரிய பயிற்சி அளிக்கப்படுவார்கள். ஒரு குழந்தைக்கு ரூபாய் 100 வீதம், அவர்களுக்கு மதிப்பூதியமாக ஓராண்டிற்கு மொத்தம் ரூபாய் 1,000 அளிக்கப்படும். இக்குழந்தைகளுக்குப் புத்தகங்களும் கல்விச்சாதனங்களும் இலவசமாக வழங்கப்படும். **இத்திட்டத்தின் கீழ் ஓராண்டில் 15 லட்சம் குழந்தைகள் பயன் பெறுவர். இதற்கான ஆண்டுச் செலவு சுமார் ரூபாய் 20 கோடி ஆகும்.** இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் கட்டாயமாகத் தொடக்கக் கல்வியும், படித்து வேலை வாய்ப்பற்றிருப்போருக்கு வேலை வாய்ப்பும் அளிக்கின்ற வகையில், நாங்கள் மேற்கொண்டுள்ள இப்பெரு முயற்சியை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

**118. கிராமக் குழந்தைகளிடையே " சிறந்த படிப்பறிவுத் திறனுடையவர்களைத் தேர்ந்தெடுக்கும் திட்டம் " எனப்படும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க முடிவு செய்துள்ளோம்.** இத்திட்டத்தின் கீழ்க் கிராமப் பகுதிகளிலுள்ள பள்ளிச் சிறுவர், சிறுமியருக்கு அவர்கள் எட்டாம் வகுப்பை முடிக்கும் நிலையில் தேர்வு ஒன்று நடத்தப்படும். சாதி, மத வேறுபாடின்றி மாவட்டம் தோறும் இத்தேர்வில் முதல் ஐம்பது இடங்களைப் பெறும் ஐம்பது சிறுமியர், ஐம்பது சிறுவர் தேர்ந்தெடுக்கப்படுவர். அவ்வாறு தெரிந்தெடுக்கப்படுகின்ற குழந்தைகள் தொடர்ந்து பன்னிரண்டாம் வகுப்பைப் படித்து முடிக்கின்றவரை, ஒவ்வொரு குழந்தைக்கும், ரூபாய் 1,000 வீதம் ஆண்டுதோறும் ஊக்கத் தொகை வழங்கப்படும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 12,000-க்குள் இருக்கும் குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறுவார்கள்.

**119.** கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு இவ்வாண்டில் புதிதாக 1,200 இடைநிலை ஆசிரியர் பதவிகள் உருவாக்கப்படும். மேலும், இந்த ஆண்டில் 145 பட்டதாரி ஆசிரியர்/தமிழ்ப்புலவர் பதவிகளும் உருவாக்கப்படும். சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு 1,000 தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படும். உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் புதிய திட்டமும் இவ்வாண்டு தொடங்கப்படும். இதற்கு மொத்தம் ரூபாய் 2.25 கோடி செலவிடப்படும். 'ஹட்கோ' நிறுவனத்திட மிருந்து இதற்கு நிதியுதவி பெறப்படும். இவ்வாண்டு இத்திட்டத்தின்கீழ் 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப் படும். மேலும் 39 மேனிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடச் சாதனங்கள் வழங்குவதற்கும் நாங்கள் நிதி ஒதுக்கியுள்ளோம். ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியளிப்பதற்கு முன்னுரிமை அளிக்க இருக்கிறோம். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனம் அமைக்கப்படும்.

**120.** விரிவான பள்ளிக் கல்வித் திட்டமொன்றை நாங்கள் வகுத்துள்ளோம். இத்திட்டம் 7 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது. உலக வங்கியிடமிருந்து நிதியுதவியைப் பெறுவதற்காக இத்திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பவிருக் கிறோம். இத்திட்டத்தில், வாழ்க்கைத் தொழிற் கல்வி, ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் பணித்திறனை உயர்த்துதல், பள்ளிகளுக்கு உரிய குறைந்த அளவு வசதிகளைச் செய்து தருதல் முதலியனவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**121.** தொழில் நுட்பக் கல்விக்குப் பெரும் முக்கியத்துவம் அளிப்போம் என்று நாங்கள் தேர்தல் அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளோம். அதற்காகப் புதிய திட்டமொன்று செயல்படுத்தப்படவிருக்கிறது. இதன்கீழ் மொத்தம் ரூபாய் 76 கோடி செலவில் அரசினர் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் 21-ம் அரசினர் மானியம் பெறும் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் 34-ம் மேம்படுத்தப்படும். உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ்ப் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் கூடுதல் மாணவர்கள் சேர்க்கப்படுவர். பாடப் பயிற்சித் திட்டங்களின் தரமும் உயர்த்தப்படும். நவீன தொழில் நுட்பவியல் யுகத்திற்குப் பொருந்துகின்ற வகையில், இந்த மாநிலத்தில் அளிக்கப்படும் பயிற்சிகள் உயர்ந்த தரமுடையனவாக இருக்க முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**122.** நமது பல்கலைக் கழகங்களின் நிதி நிலைமை நன்றாக இல்லை. பல்கலைக் கழகங்களுக்கு இதுகாறும் அளிக்கப்பட்டு வந்த ஆண்டு மொத்த மானியம் ரூபாய் 11.70 கோடி, இவ்வாண்டில் ரூபாய் 18.83 கோடியாக உயர்த்தி வழங்கப்படும். பல்கலைக் கழகங்களில் பல்கலைக் கழக மானியக் குழு உதவி பெறும் திட்டங்களுக்காக ரூபாய் 50 இலட்சம் தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தின் வளர்ச்சிக்கு நமது பல்கலைக் கழகங்கள் பயனுள்ள வகையில் பணியாற்றுவதற்கு ஆவன செய்வதே எங்களது இலட்சியமாகும்.

**123.** தருமபுரி மாவட்டத்தில் புதிதாக அரசு மகளிர் கல்லூரி ஒன்றை நாங்கள் தொடங்க உள்ளோம் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பாண்டில் இதற் குரிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இக்கல்லூரி செயல்படத் தொடங்கும்.

**124.** அண்மையில் எடுக்கப்பட்ட 1991 ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள், தமிழ் நாட்டில் 64 சதவீத மக்கள் கல்வி அறிவு படைத்தவர்களாக உள்ளனர் என்பதையும், படிப்பறிவு பெற்ற மக்கள் தொகையில் கேரளத்திற்கு அடுத்த இடத்தில் நமது மாநிலம் உள்ளது என்பதையும் தெளிவாக்குகின்றன. இது ஓரளவுக்கு மன நிறைவு அளிப்பதாக இருந்தாலும், இம்மாநிலத்தில் எழுத்தறி வின்மையை அடியோடு ஒழிப்பதற்கு நாங்கள் ஒல்லும் வகை அனைத்தாலும் முயன்று செல்லும் வாயெல்லாம் செயற்படுவோம். நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான சிறார்களுக்குப் பள்ளி சாராக் கல்வி அளிக்கும் திட்டம் செயல் படுத்தப்படுவதுடன், மத்திய அரசு உதவியுடன் பதினைந்து வயது முதல் முப்பத்தைந்து வயது வரையில் உள்ளவர்களுக்கு எழுத்தறிவு புகட்டும் இயக்கம் ஒன்றை நாங்கள் இந்த ஆண்டில் தொடங்கவுள்ளோம். இத்தகைய நிலையில், சுமார் 78 இலட்சம் பேர் எழுத்தறிவற்றவர்களாக உள்ளனர் எனத் தெரிய வருகிறது. முதற்கட்டமாக, நடப்பாண்டில் 7 மாவட்டங்களில் இந்த இயக்கத்தை நாங்கள் மேற்கொள்வோம். மூன்று ஆண்டுகளில் இது முடிவடையும். மாவட்ட ஆட்சியரின் நேரடி மேற்பார்வையின்கீழ்ச் செயல்படுத்தப்படும் இத்திட்டத் திற்கு, மொத்தம் ரூபாய் 46.80 கோடி செலவிடப்படும்.

## தமிழ் வளர்ச்சி–பண்பாடு

**125.** “ பழங்கலை—பண்பாட்டு இயக்ககம் ” புதிதாக ஏற்படுத்தப்படும். இவ்வியக்ககம் தற்போது கலைகள், பண்பாட்டு வளர்ச்சி தொடர்பான

பணிகளை ஆற்றிவரும் பல்வேறு பிரிவுகளையும் ஒரே அமைப்பில் கொண்டு வந்து, இசை, நாட்டியம், நாடகம், ஓவியம் முதலிய பழங்கலைகள் பொலிவும் மேன்மையும் பெறத் துணை புரியும்.

**126.** அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழியாக பயன்படுத்தப்படுவதை ஊக்குவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்டங்கள் தோறும், தமிழில் மிகச் சிறந்த வரைவுகள் எழுதுவோர்களுக்கு, 5 பரிசுகள் வழங்குவதன் மூலம், தமிழில் வரைவுகள் எழுதுவதற்கு ஊக்கமளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டிகள் மாவட்ட நிலையில் நடத்தப்பட்டுப் பரிசுகள் உடனுக்குடன் வழங்கப்படும். இதுபோல, மாநில அளவில் மிகச் சிறந்தவையாக அமையும் 3 வரைவுகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

**127.** மாணவர்கள் தமிழ்மொழி மீது காட்டும் பேரார்வத்தைப் பேணி வளர்ப்பதற்கு நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். கல்லூரித் தமிழ் மன்றங்கள் தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உரிய பல்வகைப் பணிகளையும் விரும்பி மேற்கொள்ள இயலும் வண்ணம், அவற்றிற்குத் தக்க முறையில் நிதியுதவி வழங்கப்படும்.

**128.** பண்டைத் தமிழர்கள் மிகச் சிறந்த கடலோடிகளாக விளங்கினர். தமிழகத்திற்கும் உரோமானியப் பேரரசிற்கும் இடையே நடைபெற்ற பெருங்கடல் வாணிகத்தின் நம்பத்தகுந்த ஆதாரங்களாக அமையும் தடயங்கள் வங்காள விரிகுடாப் பகுதிகளில் மூழ்கிக் கிடக்கக் கூடுமெனத் தெரிய வருகிறது. பெரும் வரலாற்றுச் சிறப்புடைய

தொல்பொருள் சான்றுகள் மூழ்கிக் கிடக்கும் இடங்களில் ஆய்வுகள் நடத்தி, அவற்றை மீட்பதற்குத் தேசியக் கடலியல் நிறுவனத்துடன் கூட்டாகச் செயல்படுத்தப்படும் கடல் அகழ்வாய்வுத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலம்

**129.** ''அனைவர்க்கும் நல்வாழ்வு'' அளிப்பதற்குப் பாடுபடுவதே இவ்வரசின் குறிக்கோளாகும். நடப்பாண்டில், மக்கள் நல்வாழ்வு—மருத்துவப் பணிகள் குறித்த மொத்த ஒதுக்கீடு ரூபாய் 343.17 கோடியாக இருக்கும். இது முந்தைய ஆண்டில் ரூபாய் 294.68 கோடியாக இருந்தது.

**130.** கிராமப்புற மருந்தகங்களை நிலை உயர்த்துவதன் மூலம், நடப்பாண்டில், மேலும் 76 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்படும். இதனால், ஆரம்ப சுகாதார நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 1,505 ஆக உயரும். இதன் மூலம் தமிழ் நாட்டில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற இலக்கை எய்துகிறோம். **ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்கான நிதி ஒதுக்கீடு ஆண்டொன்றுக்கு ரூபாய் 30,000-லிருந்து ரூபாய் 40,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், ரூபாய் 1.5 கோடி கூடுதல் செலவாகும்.**

**131.** வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும், உரிய மருத்துவ சிகிச்சை பெறுவதில் உள்ள இடர்ப்பாடுகள் குறித்து உறுப்பினர்கள் நன்கு அறிவர். **நடப்பாண்டில் இரண்டு புதிய திட்டங்களைத் தொடங்க முடிவு செய்துள்ளோம். தற்போது அரசு**

மருத்துவமனை ஏதுமின்றி 15 வட்டங்கள் உள்ளன. மூன்றாண்டு கால அளவில், இந்த 15 வட்டங்களிலும், புதிய மருத்துவமனைகளை ஏற்படுத்தவுள்ளோம். தற்போது வட்ட மருத்துவ மனைகள் சிலவற்றில் மருத்துவ வசதிகள் மிகவும் குறைவாக உள்ளன. வட்ட மருத்துவமனைகள் அனைத்திலும் நோயாளிகள் படுக்கைகளின் எண்ணிக்கையை குறைந்த அளவு 32 ஆக அதிகரிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதன் வாயிலாகக் கூடுதலாக 222 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படும், புதியதாக வட்ட மருத்துவமனைகள் தொடங்குதல், தற்போதுள்ள மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய இத்திட்டம், ரூபாய் 4 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். வட்ட மருத்துவமனைகள் அனைத்திலும் நோயாளி ஊர்திகள் இருக்கும் வகையில், ரூபாய் 50.4 இலட்சம் சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நோயாளி ஊர்திகள் விபத்து, அவசர சிகிச்சைத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு மக்களுக்கு உரிய முறையில் சிறப்பாகப் பணியாற்றும்.

**132.** மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் மேம்படுத்தப்படும். நடப்பாண்டில் ஒரு புதிய திட்டத்தின் கீழ் ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 3 ஆண்டு கால அளவில் இத்திட்டம் மேற் கொள்ளப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும், நீராவிச் சலவை இயந்திரம், எரிவாயு சமையல் அடுப்புக்கள், விபத்து-அவசர சிகிச்சைப் பிரிவுகள் முதலியவை போன்ற அடிப்படை வசதிகளைப் படிப்படியாக வழங்கும் இன்னொரு திட்டம் ரூபாய் 11.22 கோடி செலவில் நிறை வேற்றப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள்

அனைத்திலும் படுக்கைகளின் எண்ணிக்கையைக் குறைந்த அளவு 200 ஆக அதிகரிக்கும் திட்டத்தை மேற்கொள்ள விருக்கிறோம். நடப்பாண்டில் முதல் கட்டமாக விருதுநகர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

133. கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டபோதிலும், இப்பகுதிகளில் மருத்துவர்களும், பிற பணியாளர்களும் சிறந்த மருத்துவப் பணியை வழங்க வேண்டியது அவசியமாகும். கிராமப் பகுதிகளில் பணி புரியும் மருத்துவர்களுக்கு ஊக்குவிப்பு அளிக்கும் திட்டம் குறித்து விரிவான ஆய்வு ஒன்றை நாங்கள் மேற்கொள்ள விருக்கிறோம். ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் கீழ்நிலையில், அளிக்கப்படும் சுகாதாரப் பணிகளை மேம்படுத்துவதும் அவசியமாகும். சுகாதாரப் பணிகளையும், சத்துணவுப் பணிகளையும் ஒருங்கிணைத்து கிராம அளவில் அனைத்துப் பணிகளும் ஒரே இடத்தில், அதாவது சத்துணவு மையத்திலேயே, கிடைக்கும் வகையில் மாற்றி அமைக்கக் கருதியுள்ளோம்.

134. மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் நிலையை மேம்படுத்த அதிக முக்கியத்துவம் அளிக்க இருக்கிறோம். ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி—ஆராய்ச்சி நிறுவனத்தில் புதிதாக வசதிகள் செய்துகொடுக்க ரூபாய் 3.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகளுக்கு, மருத்துவ சாதனங்கள் வாங்க ரூபாய் 3.5 கோடி தனி நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**135.** குடும்ப நலத் திட்டத்திற்கு இந்த அரசு உரிய முக்கியத்துவம் அளிக்கும். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு சிறப்பாகச் சாதனை எய்தியுள்ளபோதிலும், மக்கள் தொகைப் பெருக்கம் குறைவது நீடித்திருக்கும் வகையில், புதிய நடைமுறைகளும் அணுகு முறைகளும் கையாளப்பட வேண்டி இருக்கின்றன. இந்திய மக்கள் தொகைத் திட்டம்—V தென்னார்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் 'டேனிடா' ஆதரவு பெறும் சுகாதாரத் திட்டம் ஆகிய திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## சத்துணவு

**136.** **'புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம்' வலுப்படுத்தப்படும்.** இத் திட்டத்திற்கு ரூபாய் 235.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆறு மாதத்திலிருந்து இரண்டு வயது வரையிலான குழந்தைகளின் நலப்பணியையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம். உலக வங்கியின் நிதியுதவியைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதிலும் இத்திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த உள்ளோம். இதன்மூலம், கிராமந்தோறும் உள்ள சத்துணவு மையங்கள் அனைத்தும் சத்துணவுப் பணியோடு, சுகாதாரப் பணியையும் கவனிக்கும் நிலையங்களாக மாற்றியமைக்கப்படும்.

**137.** சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு மையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்யப்

பட்டுள்ளது. அத்துடன், இக்கட்டிடங்களை உடனடியாகப் பராமரிப்பதற்கு ரூபாய் ஒரு கோடி வழங்கியுள்ளோம். சமையற்பாத்திரங்களைப் படிப்படியாகப் புதிதாக வாங்குவதற்காக ரூபாய் ஒரு கோடியும் வழங்கியுள்ளோம். இந்தச் சத்துணவு மையங்களிலுள்ள கட்டடங்களையும் வசதிகளையும் பெருமளவுக்கு மேம்படுத்த வேண்டியுள்ளது. முதற்கண் 5 மாவட்டங்களில் இப்பணிகளை மேற்கொள்வதற்காகத் தாமாகவே முன்வந்து உதவக்கூடிய நன்கொடையாளர்களின் ஒத்துழைப்பை நாம் பெறவுள்ளோம். படிப்படியாக, அனைத்து மாவட்டங்களிலும் இதுபோலத் தாமாக முன்வந்து உதவும் கொடையாளர்களிடமிருந்து உதவிபெறும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

**138.** பாலர் பள்ளி—சத்துணவு மையங்கள், சத்துணவு மையங்களாகச் செயல்படுவதோடு மட்டுமல்லாமல் இளஞ்சிறார் பள்ளிகளாகவும் செயல்படும் வகையில், அவற்றின் நிலை உயர்த்தப்படும். இத்திட்டத்தில் தற்போது இருந்துவரும் அனைத்துப் பணியாளர்களுக்கும் இதற்கெனத் தகுந்த தனிப் பயிற்சி அளிக்கப்படும். இதன்மூலம் இந்நிலையங்கள் சிறார்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே சிறந்த கல்வியை அளிக்கும் கல்வி நிலையங்களாகவும் அமையும்.

**139.** கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் போதிய சுகாதாரப் பணிகளை அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை, நாங்கள் படிப்படியாக மேற்கொள்ள இருக்கிறோம். சத்தான உணவின்றி வாடும் ஒவ்வொரு தாய்மாருக்கும், மகப்பேற்றிற்கு முன்னர் நான்கு மாதத்திற்கும் மகப்பேற்றிற்குப் பின்னர் நான்கு மாதத்திற்கும் ஆக,

எட்டு மாதங்களுக்குச் சத்துணவும், சுகாதார உதவியும் அளிக்கப்படும். அத்துடன், கருவுற்றுப் பேறுகாலத்தின்போது ஆபத்தான நிலை ஏற்பட வாய்ப்புள்ள தாய்மார்களைத் தேவையான மருத்துவச் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு அனுப்பி, சிறந்த மருத்துவக் கவனிப்பு பெறச்செய்வதற்கான திட்டமொன்றும் மேற்கொள்ளப்படும். கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் நல்ல சத்துணவையும் சிறப்பான சுகாதாரப் பணியையும் வழங்க இருக்கின்ற இத்திட்டத்தை, உறுப்பினர்கள் உளமார வரவேற்பார்கள் என நாங்கள் உறுதி கொள்கிறோம்.

## வேலை வாய்ப்பு

**140.** நாட்டில் வேலை வாய்ப்பில்லாத நிலை மிகுந்த அளவிற்கு நிலவுகின்ற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நமது வேலைவாய்ப்பகங்களில், படித்து வேலையற்ற சுமார் 32.44 இலட்சம் பேர் வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ளனர். அரசு அலுவலகங்களில் மேலும் பதவிகளை ஏற்படுத்துவது அரசுக்கு இயலக்கூடியதல்ல ; விரும்பத்தக்கதும் அல்ல. எல்லாத்துறைகளிலும் வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையில் பொருளாதார நடவடிக்கைகளை முடுக்கி விடுவதே நமது இலட்சியமாகும். வேளாண்மைத் துறையில் உள்ள தேக்க நிலை அகற்றப்பட வேண்டும் ; விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சிக்கு வழிகாண வேண்டும். புன்செய் நிலங்களில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன், தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொணர்தல், தண்ணீரைச் செவ்விய முறையில் பயன்படுத்துதல், உணவுப் பொருள்களைப் பதப்படுத்தல் ஆகியவற்றில் இவ்வாறு வளர்ச்சியை நாம் உருவாக்க வேண்டும்.

வேளாண்மையிலும் மீன்வளம், கால்நடை வளர்ப்பு போன்ற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் நல்ல வளர்ச்சியை எட்டினோமேயானால், கிராமப் பகுதிகளில் வாழும் 66 சதவிகிதம் மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பும், நல்ல வருமானமும் கிட்டும். படித்துள்ள இளைஞர்களுக்குப் பயனுள்ள வேலை வாய்ப்பை அளிக்கும் வண்ணம், நாங்கள் விரைவான தொழில் மயத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுப்போம். வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் வாயிலாகப் "பணி வசதிகள் அளிக்கும் துறை" (Service Sector) மிகவும் முக்கியமானதாகும், இத்துறையில் வேலைவாய்ப்பு வசதிகள் எந்த அளவுக்கு அதிகரிக்கப்படலாம் என்பதை நாங்கள் விரிவாக ஆய்வு செய்வோம்.

**141.** வளர்ச்சியடைய வேண்டும் என்பது நமது குறிக்கோளாக இருக்கையில், வேலையில்லாதவர்கள் பயனுள்ள பணியொன்றை ஆற்றிட வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். படித்து வேலையற்றிருக்கும் 1.5 இலட்சம் பேருக்கு பயனுள்ள வேலை அளிக்கும் வகையில் மாநிலப் பள்ளி சாராக் கல்வித்திட்டத்தை நாங்கள் தொடங்குவோம். சுமார் 7 இலட்சம் பேருக்கு ஆண்டில் சராசரியாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் வகை செய்கிறது. நாம் தொடங்கியுள்ள ஊரகத் தொழில்கள் துணைத் திட்டம் ஒரு இலட்சம் பேருக்கு சுய வேலை வாய்ப்பை அளிக்கும். ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒரு இலட்சம் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பை நல்கும். ஆதி திராவிடர் வேலை வாய்ப்புத் துணைத் திட்டம் 65,000

பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், நேரு வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம். இவ்வாறாகக் கூடுதலாக வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்க ஒருமித்த முயற்சி மேற்கொள்ளப்படும். அதே சமயத்தில், இவ்வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்க வல்லதாகப் பொருளாதாரத்தில் போதிய வளர்ச்சியை ஏற்படுத்த நாங்கள் முக்கியத்துவம் அளிக்க இருக்கிறோம்.

### ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலன்

**142.** ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் வறுமையில் உழலும் வாழ்க்கையை மேம்படுத்தவும், அவர்களுக்கு சமூகத்தில் சம உரிமையைப் பெற்றுத் தரவும் இந்த அரசு பாடுபடும். **ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காகப் புதிய 10 அம்சத் திட்டமொன்றைத் தொடங்க முடிவு செய்துள்ளோம்.** இந்தத் திட்டம் ஐந்தாண்டு காலத்திற்குச் செயல்படுத்தப்பட விருக்கிறது. இதன் மூலம், நமது மாநிலத்தில் வாழும் ஆதிதிராவிடர்—பழங்குடி மக்கள் வாழ்க்கைத் தரம் பெருமளவிற்கு உயர்ந்திடும் என்பது எங்களது திண்ணமான நம்பிக்கையாகும்.

**143.** இந்தப் புதிய 10 அம்சத் திட்டத்தில் பின்வரும் பணிகள் அடங்கும் :—

* ஆதிதிராவிடர்—பழங்குடியின மக்களுக்காகப் பொருளாதார மேம்பாட்டுப் பணித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இவை அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் செயற்படுத்தப்படும். இதன்மூலம் 3.5 இலட்சம் குடும்பங்கள் உதவிபெறும். முதற்கண், 1991—92ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 65,000 குடும்பங்கள் பயன்பெறும்.

* ஆதிதிராவிடர்—பழங்குடி மக்களுக்கு 10,000 கிணறுகள் இலவசமாக வெட்டித் தரப்படும். இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர், பழங்குடி மக்களின் நிலங்களுக்குப் பாசனமளிக்கக் குடும்பத்திற்கு ஒரு கிணறு வீதம் வெட்டித் தரப்படும்.

* ஆதிதிராவிடர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 5,000 ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினர் தொழில் தொடங்குவதற்கு உதவி பெறுவார்கள். நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ், 1,000 ஆதிதிராவிடர்களுக்குக் குறிப்பிட்ட உரிய உதவி அளிக்கப்படும்.

* தொழில் பயிற்சிப் பள்ளியில் கல்வித் தகுதி பெற்ற ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்பு அளிக்கும் ஒரு புதிய திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் 5,000 ஆதிதிராவிடர்கள் உதவிபெறுவார்கள். நடப்பாண்டில் 1,000 ஆதிதிராவிடர்களுக்கு உதவி நல்கப்படும்.

* அடுத்த ஐந்தாண்டுகளில் ஆதிதிராவிடர் /பழங்குடியினர் குடும்பங்களுக்கு இலவசமாக மொத்தம் 4 இலட்சம் வீட்டு மனைகள் வழங்கப்படும். நடப்பாண்டில், 75,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும்.

* ஆதிதிராவிடர்கள் /பழங்குடியினருக்காகப் பெருமளவில் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 50,000 வீடுகள் கட்டித்தரப்படும். இத்திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் 3 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெறும்.

* இதுவரையில் குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லாத 1,418 ஆதிதிராவிட குடியிருப்புப் பகுதிகளுக்கு நடப்பாண்டில் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும். முக்கியக் குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருந்தாலும், ஆதிதிராவிடர் – பழங்குடி மக்கள் வாழ்ந்து வரும் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படாமலுள்ளது. அத்தகைய, 1,007 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும். இவ்வாறாக அடுத்த 3 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் போதிய குடிநீர் வசதி செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* 1,063 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இதுவரை இணைப்புச் சாலைகள் அமைக்கப்படவில்லை. இந்தக் குடியிருப்புகளில் 500 குடியிருப்புகளுக்கு நடப்பாண்டில் இணைப்புச் சாலைகள் உருவாக்கப்படும். எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அடுத்துவரும் ஆண்டுகளில் அமைக்கப்படும்.

* ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தெருவிளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். இப்பணி, இவ்வாண்டில் தொடங்கப்பட்டு, அடுத்துவரும் ஆண்டுகளில் முடிக்கப்படும்.

* அடுத்த 5 ஆண்டுகளில் 1.5 இலட்சம் ஆதிதிராவிடர் வீடுகளுக்கு 'குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் மின்விளக்கு வசதி செய்து கொடுக்கப்படும். நடப்பாண்டில், 30,000 ஆதிதிராவிடர் வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்படும்.

**144.** ஆதிதிராவிடர்கள் அனைத்து வழிகளிலும் முன்னேறுவதற்கு அடிப்படை வசதிகளையும், பொருளாதார வளர்ச்சிப் பணிகளையும் அளிக்கும் இந்தப் பத்து அம்சத் திட்டத்தை உறுப்பினர்கள் அனைவரும் பெரிதும் வரவேற்பார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

## பிற்படுத்தப்பட்டோர் நலன்

**145.** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசுதான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்தி, இந்தியாவில் பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்காக அதிக இட ஒதுக்கீடு செய்த மாநிலம் தமிழகமே என்னும் பெயரை ஈட்டித் தந்துள்ளது. மண்டல் கமிஷன் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் சமயத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதம் என மத்திய அரசால் ஒரு கொள்கை முடிவாகச் செயல் படுத்தப்பட வேண்டும் என்றும், இந்த இட ஒதுக்கீடு எல்லாத் துறைகளிலும் உள்ள வேலை வாய்ப் பிற்கும், கல்வி நிலையங்களில் சேருவதற்கும் பொருந்தச் செய்ய வேண்டும் என்றும் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

**146.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான மொத்த ஒதுக்கீடு 1990–91-ல் ரூபாய் 30.70 கோடியாக இருந்தது. அது ரூபாய் 41.35 கோடியாகத் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பின ருக்குச் சிறப்பான கல்வி வசதிகளை அளிப்பதில் நாங்கள் கவனம் செலுத்துவோம். பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைக் கவனமாகத் தயாரிப்போம். துறை நடத்தும் 280 பள்ளிகளுக்குச்

சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப் படும். மாணவ இல்லங்களுக்கு நல்ல கட்டிடங் களைக் கட்டித் தருவோம். நடப்பாண்டில் ரூபாய் 3.95 கோடி மொத்த செலவில் 44 மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும். அகில இந்தியப் பணிக்காகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் சிறப்புப் பயிற்சி நிலையம் புதிய மையத்தில் செயல்படத் தொடங்கும்; அங்குள்ள வசதிகள் மேம்படுத்தப்படும்.

**147.** புதிய பொருளாதார வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு இவ்வாண்டில் ரூபாய் 1 கோடி கூடுதல் பங்கு மூலதனம் வழங்கப் படும். **மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களுக்குச் சிறு பாசன வசதி அளிக்கும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப் படும்.** இதற்காக ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் தங்கள் நிலங்களில் குழாய்க் கிணறுகள், வடிமுனைக் கிணறுகள், திறந்தவெளிக் கிணறுகள், முதலியவற்றை அமைக்க அரசு மூலதன உதவித் தொகை அளிக்கும்.

## மகளிர் மேம்பாடு

**148.** நமது சமுதாயத்தில் மகளிர் நிலை மேம்படுவதற்கு இவ்வரசு முழுமூச்சுடன் பாடுபடும். ஏற்கனவே, பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரையில் மகளிரை மட்டுமே ஆசிரியர்களாக நியமித்திட இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மகளிர் வேலைவாய்ப்பு பெறுவது குறித்துக் கண்காணிப்ப தற்காகச் சமூக நல இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனிக்குழு நிறுவப்படும்.

**149.** மகளிருக்குக் கல்வி பெறும் வாய்ப்பு வசதிகள் தங்குதடையின்றி அளிக்கப்பட்டால் மட்டுமே நமது சமுதாயத்தில் மகளிர் நிலை உயர முடியும் என்பது தெளிவு. எனவே, பெண்குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுத் தொடர்ந்து பயின்று வரத்தேவையான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும்.

**150.** மகளிர் பொருளாதாரத் தன்னிறைவைப் பெறவேண்டும் என்பதே நம்முடைய குறிக்கோளாகும். தற்போது மகளிர்க்கான சிறுசிறு பணித்திட்டங்கள் பல்வேறு துறைகளில் இடம் பெற்றுள்ளன. **இவையனைத்தையும் ஒன்றாக இணைத்து ஒருங் இணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்க இவ்வரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.** இத்திட்டம் கிராமப் பகுதிகளில் உள்ள மகளிர் எல்லா வழிகளிலும் முன்னேற ஆவன செய்யும். **இத்திட்டத்தின்கீழ் ஓர் இலட்சம் மகளிர் நிலையான சுயவேலைவாய்ப்புப் பெற்றிடவேண்டும் என்பதே எமது குறிக்கோள்.** கிராமப் பகுதிகளில் வாழும் பெண்களைக் குழுக்களாகச் சேர்க்கவும் இக்குழுக்கள் ஒவ்வொன்றும் பயனுள்ள வேலைகளில் ஈடுபட அவர்களுக்கு ஆர்வமும் ஈடுபாடும் வரும் வகையில் நாங்கள் பயிற்சி கொடுக்கவும் இருக்கின்றோம். இப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் அவர்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியும். இன்னும் சொல்வதானால், இம்மகளிர், தாமே ஒன்றுகூடி, அணிதிரண்டு தனித்தனிக் குழுக்களாக அமைத்துக்கொண்டு, அரசு அமைப்புகளிடமிருந்து உரிய உதவிகளைப் பெற்று, தமது வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள உரிய நடவடிக்கைகளை நாம் எடுக்கக் கருதியுள்ளோம்.

இத்திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவது அத்துணை எளிதான செயலன்று. ஏனெனில், அவர்கள் ஒன்றுகூடி, தங்களுக்குள் குழுக்களை அமைத்துக்கொண்டு, ஒவ்வொரு குழுவும் இன்னின்ன பணிகளை மேற்கொள்ளலாம் என்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டியுள்ளது. நாம் வெறுமனே ஏட்டளவில் இலக்கு குறிப்பிட்டு அதனை எய்த முனையவோ அவசர கோலத்தில் பணிகளைச் செய்யவோ மாட்டோம். மாறாக, இந்த மகளிர் குழுக்கள் உண்மையில் நிலையான முன்னேற்றம் பெற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். இந்தத் திட்டத்தை உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

**151.** நடப்பு ஆண்டில் 'மகளிர் தொழில் முனைவோர் உருவாக்கும் திட்டம்' எனும் புதிய திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 800 மகளிர் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தொழில் முனைவோர் ஆவதற்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

**152.** நடைபாதைக் கடைகள், பூ, காய்கறி வியாபாரம், வீட்டுக்குப் பயன்படும் பொருட்கள் முதலியவை போன்ற, பல்வேறுபட்ட சிறு வணிகங்களில் பெண்கள் பெருமளவில் ஈடுபட்டுள்ளார்கள். இம்மகளிர் வியாபாரம் செய்வதற்காகக் கூடுதல் வட்டி வீதங்களில் கடன் பெறுகின்றார்கள். இது, இவர்களுக்குக் கிடைக்கும் நிகர வருமானத்தை குறைக்கிறது. எவ்வித அமைப்பின்கீழும் வராத இத்தகைய சிறு வணிகத்தில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு உதவியளிக்கும் சிறப்புத் திட்டமொன்றைத் தொடங்க முடிவு செய்துள்ளோம். இதற்காகக் கூட்டுறவு

மத்திய வங்கிகள் அனைத்திலும் மகளிர் குழு ஒன்று ஏற்படுத்தப்படும். இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடனில் குறைந்தது ஒரு சதவீதமாவது மகளிருக்கு வழங்குமாறு பார்த்துக் கொள்ளப்படும். தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி 170 மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் புதிதாக ஏற்படுத்தப்படும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி அளிக்கும்.

## தொழிலாளர் நலன்

**153.** தொழிலாளர் நலனை மேம்படுத்த அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும், இவ்வரசு மேற்கொள்ளும். மாண்புமிகு முதலமைச்சர் ஏற்கெனவே அறிவித்தபடி, பெண் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்பு பெறும் நிலையை உருவாக்க, இரவு 7 மணிக்கு மேலும் பெண் தொழிலாளர் பணிபுரிய வகை செய்யப்படும். இரவு 7 மணிக்கு மேல் பணி புரியும் பெண் தொழிலாளர்கள் வீடு செல்லத் தேவையான போக்குவரத்து வசதிகளையும், அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வசதிகளையும் நிருவாகம் செய்து கொடுக்க வேண்டும் என்ற நியந்தனை விதிக்கப்படும்.

**154.** அமைப்பின் கீழ் வராத துறையில், குறிப்பாகப் பீடித் தொழிலில் பெண்களின் வேலை நிலைமைகளையும், பெண்கள் தொடர்பாகத் தொழிலாளர் நலச் சட்டங்கள் செயல்படுத்தப்படுவது குறித்தும் மேற்பார்வையிட, தொழிலாளர் நலத் துறையில் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவுள்ளோம்.

**155.** தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்கு கொள்வதை நாங்கள் வரவேற்கிறோம். இதற்கு வகை செய்ய விரைவில் சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டுமென மத்திய அரசைக் கேட்போம்.

**156.** தொழிலாளர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க தொழிலாளர் நல வாரியம் 3 புதிய வளாகங்களை ஏற்படுத்தும். இந்த வளாகங்களில் முதியோர் கல்வி, குழந்தைகள் காப்பகம், விளையாட்டு-மனமகிழ் வசதிகள், நூலகம் முதலியன அடங்கும்.

**157.** அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களுக்குப் போதிய நல வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும், உரிய பாதுகாப்பளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவர்களுக்குரிய சிறந்த பணி நிலைமைகளைப் பெற்றுத் தருவதற்கு உரிய பல்வேறு நலச் சட்டங்களைச் செவ்வனே செயற்படுத்துவோம். தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இயலும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் குறைந்த அளவு ஊதியங்களை உயர்த்த உரிய நடவடிக்கை எடுப்பது எங்கள் கடமை. இவற்றைக் கருத்திற் கொண்டு, அச்சுப்பணி, தீப்பெட்டி, பட்டாசுத் தொழில், மலைத் தோட்டம், எண்ணெய் ஆலைகள், செயற்கை வைரக்கற்களைப் பட்டை தீட்டுதல், பொறியியல் கட்டுமானத் தொழில், தையற் தொழில், திரையரங்குகள், கம்பளி - தரை விரிப்புகள் - சால்வைகள் நெய்தல், மோட்டார் வண்டிகள் பட்டறை, கைத்தறிப்பட்டு நெசவு, உப்பளங்கள், தேங்காய் நார் உரித்தல், காகிதம் தயாரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குறைந்த அளவு

ஊதியம் விரைவில் திருத்தியமைக்கப்படும். உழவுத் தொழிலாளர்களின் குறைந்த அளவு ஊதியங்களை மிக விரைவில் நாங்கள் மாற்றியமைக்க இருப்பதை யறிந்து உறுப்பினர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைவார்கள் என நம்புகிறோம்.

**158.** பள்ளிக்குச் சென்று கல்வி கற்று மகிழ்ச்சியான வாழ்வை நோக்கி நடைபோட வேண்டிய காலத்தில் தொழிற்சாலைகளில் குழந்தைகள் தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தப்படுவது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்கள் வேதனையைத் தெரிவித்துள்ளார்கள். கொடிய வறுமையே, பலவேளைகளில், கல்விச்சாலை செல்ல வேண்டிய துள்ளுநடைக் குழந்தைகளைத் தொழிற் சாலைகளில் வேலை செய்யத் துரத்துகிறது. இது போல, வறுமை வாய்ப்பட்ட குழந்தைகள் வேலைக்குச் செல்லும் அவல நிலையினை அறவே தடை செய்ய நமக்குப் போதிய அதிகாரங்கள் வேண்டும் என்று கூறும் அதே சமயம், ‘குழந்தைத் தொழிலாளர்கள்’ உருவாக இடம் தரும் சம்பந்தப்பட்ட அனைவரும்-பெற்றோரும் வேலை அளிப்பவர்களும் - கொண்டிருக்கும் மனப் போக்கில் மாறுதல் ஏற்படச் செய்யும் வகையில் நாம் இதன் தீமைகளை எடுத்துக்கூறி அறிவுறுத்தப் பெரிதும் பாடுபடுவோம்.

### ஏழை மக்களுக்கான நலத் திட்டங்கள்

**159.** அனைத்துத் துறைகளிலும் விரைவான வளர்ச்சிக்கு உயர் முக்கியத்துவம் அளிக்க இருக்கும் அதே சமயத்தில், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் நலனுக்கான சிறப்புத் திட்டங்களின் பலன், அவர்களைச் சென்று சேர ஆவன செய்வோம்.

160. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு, முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வாரத்திற்கு ஒருமுறை அரைக்கிலோ அரிசியும், இலவசமாக உணவும், அல்லது, அவர்கள் விருப்பத்திற்கு இணங்க வாரத்திற்கு ஒருமுறை ஒரு கிலோ அரிசி என்ற தன்மையில் இலவசமாக வழங்கி வந்தது. இத்திட்டத்தை முந்தைய அரசு நிறுத்தி விட்டது. **நாங்கள் ரூபாய் 8.27 கோடி ஆண்டுச் செலவில், முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தைப் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15–9–91 முதல் மீண்டும் கொண்டு வர இருக்கிறோம். அவ்வாறு முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கு ஆண்டுக்கு இரண்டுமுறை இலவச வேட்டி அல்லது புடவை தொடர்ந்து வழங்க உள்ளோம்.**

161. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், சிறு உழவர், உழவுத் தொழிலாளர், கிராமத்தொழிலாளர்கள் ஆகியோருக்கான காப்புறுதித் திட்டமொன்றைக் கொண்டு வந்தார். இத்திட்டத்தின்கீழ், வருவாய் ஈட்டும் தொழிலாளர் இறக்க நேரிடின் அவர் குடும்பத்திற்கு ரூபாய் 5,000 வழங்கப்பட்டது. இத்திட்டத்தை முந்தைய அரசு கைவிட்டு விட்டு, அவர்களுக்கு ரூபாய் 3,000 மட்டும் வழங்கும் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இனி, **நாங்கள் இத்திட்டத்தை மாற்றியமைத்து குடும்பத் தலைவர் இறக்க நேரிடின் அவரது குடும்பத்திற்கு பழையபடி ரூபாய் 5,000 வழங்கவுள்ளோம். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 5 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.**

**162. கைத்தறி நெசவாளர்களுக்காகக் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டமொன்றைக் கொண்டு வரவிருக்கிறோம். இத்திட்டத்தின்கீழ், ஏதேனும் ஒரு**

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர் ஒருவர் இறக்க நேரிடும்பொழுது, பத்தாண்டு காலத்திற்கு அவருடைய குடும்பத்திற்கு மாதம் ரூபாய் 250 ஓய்வூதியமாக வழங்கப்படும். அவ்வாறு செய்யும்பொழுது அவருடைய குழந்தைகள் பிற்காலத்தில் தங்கள் வாழ்க்கையைத் திறம்பட அமைத்துக் கொள்ள முடியும்.

**163.** விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் தற்போது மோட்டார் வண்டி விபத்துக்கள் இடம் பெறவில்லை. ஏனெனில், அத்தகைய விபத்துக்களில் இழப்பீட்டுத் தொகை கோரிப் பெறமுடியும். மோட்டார் வண்டிகள் விபத்தில் இறந்து போவோருக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்காக 1978–ல் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நிவாரணத் தொகையைப் பின்வருமாறு உயர்த்த நாங்கள் முடிவு செய்துள்ளோம் :—

| | தற்போது வழங்கப் படுவது. | இனி வழங்கக் கருதி யுள்ளது. |
|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். |
| இறந்து விட்டால் | 1,000 | 3,000 |
| நிரந்தரமாக இயலாமை யடைந்தால் | 800 | 1,500 |
| ஒரு கண் அல்லது உடலில் ஒரு உறுப்பை இழந்தால் | 400 | 1,000 |
| சிறு காயம் ஏற்பட்டால் | 50 | 100 |

இத்திட்டத்திற்குக் கூடுதலாக ரூபாய் 1.5 கோடி செலவாகும். இந் நிவாரணத் தொகை முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து கொடுக்கப்படும். மோட்டார் வண்டி வரி வரவுகளில் ஆண்டுதோறும் ஒரு சதவீதம் இந்நிதிக்கு மாற்றப் படும்.

**164.** இந்த அரசு முதியோருக்குப் படிப்படியாக வசதிகளைச் செய்துதரும். இத்திட்டத்தின்கீழ் முதியோர் இல்லங்கள் தொடங்கப்படும். பெரிய அளவிலான முதியோர் இல்லங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக நடப்பாண் டில் ஐந்து இல்லங்கள் தொடங்கப்படும்.

### அரசுப் பணியாளர்களுக்குப் பயன்கள்

**165.** ஐந்தாம் சம்பளக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதையடுத்துத் தீர்க்கப்படாமல் எஞ்சி யுள்ள குறைகள் குறித்த முறையீடுகள் அனைத்தையும் பரிசீலிக்கும் பொறுப்பு, அலுவலர் குழு ஒன்றிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தொகுப்புச் சம்பளம் பெறும் பணியாளர் உள்பட அனைத்துப் பணியாளர்களுக்கும், குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ்க் கிடைக்கும் தொகை ரூபாய் 40,000-லிருந்து ரூபாய் 60,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**166. அரசுப் பணியாளர் நல்வாழ்வு நிதி ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும்.** இந்நிதியானது, அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைப்பெற வசதி இல்லாத பெரிய, அரிய அறுவை சிகிச்சைகளுக்கு ரூ. 25,000 வரையிலும் மானிய உதவியாக அளிக்கப் பயன்படுத்தப்படும். செலவு அதிகம் ஆகும் தனிச் சிறப்பு வாய்ந்த இனங்களில் எளிமையான

வட்டிவிகிதத்துடன் கூடிய கடனும் வழங்கப்படும். இந்நிதிக்காக அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு ரூபாய் 5 மட்டுமே தங்கள் பங்காக வழங்க வேண்டும். அதற்குச் சமமான தொகையை அரசு வழங்கும். இவ்வாறு, ரூபாய் 1 கோடி அளவிற்கு நிதி ஏற்படுத்தப்படும்.

**167.** அரசுப் பணியாளர்களுக்கான வீடு கட்டும் முன்பணத்துக்காக மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 16.36 கோடியாக இருந்தது ரூபாய் 18.88 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. வீடு கட்டும் முன்பணம் கேட்டு வந்த விண்ணப்பங்களில், வழங்கப் படாமல் அதிக விண்ணப்பங்கள் தேங்கியிருப்பதால், இவ்வாண்டில் நிதி நிறுவனங்களுடன் ஏற்பாடு செய்து கூடுதலாக ரூபாய் 10 கோடி கிடைக்கச் செய்ய இருக்கிறோம்.

**168.** ஓய்வூதியம், ஏனைய ஓய்வுக்கால அனு கூலங்கள் ஆகியவற்றை முடிவு செய்வதில் காலத் தாழ்வு ஏற்படுத்தக்கூடிய தற்போதைய நடைமுறை களை விரிவாக ஆய்வு செய்தோம். ஓய்வூதியத்தை விரைந்து முடிவு செய்யும் நடைமுறையை எளிதாக்கும் வகையில், நீண்ட கால முன்பண விவரங்களையெல்லாம் பதிவு செய்ய, தாமே பணம் பெறும் அதிகாரிகளுக்குப் "பாஸ் புத்தக ஏற்பாடு" தொடங்கப்பட இருக்கிறது. கடைசி ஊதியச் சான்றிதழ் களை மாநிலக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்புவதை விட்டு விட்டு, பணிக்கொடைக் கோரிக்கைகளை முடிவு செய்ய, துறைத் தலைவர் களுக்கு அதிகாரம் அளிக்கப்படும். இந்த ஏற்பாடுகள் அனைத்தும் ஓய்வுகால அனுகூலங்களை விரைந்து முடிவு செய்வதற்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

**169.** குறிக்கோள்களை அடையக்கூடியதாகவும் சிறந்த முறையில் பணியாற்றக் கூடியதாகவும் இருக்கத்தக்கவகையில் நிருவாகத்தைச் சீர்த்திருத்தி அமைக்க நாங்கள் விரும்புகின்றோம். மேலும், பொது மக்களின் தேவைகளை உணர்ந்து உடனுக்குடன் பணியாற்றும் வகையில் நிருவாகத்தைச் சீர்திருத்தி அமைக்கப்பாடுபடுவோம்.

**170.** மாவட்ட அளவில் சிறப்பாக நிருவாகப் பணிகள் நடந்தேறும் வண்ணம் பெரிய மாவட்டங் களை இரண்டாகப் பிரிக்கவுள்ளோம். தற்போதுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு காயிதே மில்லத் மாவட்டம் என்ற புதியதொரு மாவட்டத்தை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுத் துள்ளோம். எஞ்சியுள்ள பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் பணியைப் படிப்படியாக நிதி ஆதார வசதிக்கேற்ப மேற்கொள்வோம்.

**171.** நிருவாக அமைப்பானது, மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றும் வகை யில் மாவட்ட வருவாய் நிருவாகத்தை மாற்றி யுள்ளோம். ஒவ்வொரு வட்டமும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் துணை வட்டாட்சியர் பொறுப்பின் கீழ்ச் செயல்படும். சாதிச் சான்றிதழ் வழங்குதல், பட்டா மாற்றம் செய்து தருதல் போன்றவற்றில் உடனடியாக நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**172.** பொது மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்ற ஏதுவாக இருக்கும் வகையில் அலுவலக நடைமுறைகளையும் ஏற்பாடுகளையும் எந்த வகையில் சீர்திருத்தி அமைக்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்து ஒரு திட்டவட்டமான செயல் திட்டத்தை மூன்று மாத கால அளவிற்குள் அளிக்குமாறு முக்கியத் துறைச் செயலாளர் குழு ஒன்று கேட்டுக் கொள்ளப்படும். இந்தக் குழு அன்றாட நடைமுறைகளிலுள்ள குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்து, செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்துக் கருத்துகளைத் தெரிவிக்கும்.

**173.** கள அலுவலர்கள் ஆற்றும் பணித் தரத்தினை உன்னிப்பாகக் கண்காணித்து வருமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவர். கள அலுவலர்கள் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளும் பொழுது அவர்கள் ஆற்றும் பணி தரமிக்கதாக அமைவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். நல்ல சாதனைகளுக்கு ஊக்கமளிப்பதற்கான புதிய திட்டங்கள் தொடங்கப்படும்.

**174.** திட்டத்தின் மூலம் பயன்பெறக் கூடியவர்கள் அத்தகைய பயன்களை எவ்வித அலைக்கழிப்புமின்றிப் பெறக்கூடிய வகையில் திட்டங்கள் அனைத்தும் வடிவமைக்கப்படும். அனைத்து வகையான நலப் பணித் திட்டங்கள், பொது விநியோக முறை, சான்றிதழ்கள் வழங்குதல் ஆகியவற்றுக்கும் பொருந்தும். சுருங்கக்கூறின், சாதாரண மனிதன் அரசை அணுகக் கூடிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இது பொருந்தும்.

## வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

**175.** இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவது என்பது சுமை மிகுந்த ஒரு கடுமையான பணியாகவே இருந்தது. இந்த அரசு பதவி ஏற்ற

போது, அரசின் நிதிநிலை பெருத்த இடர்ப்பாட்டிற்கு உள்ளாகியிருந்தது. நாங்கள் பதவி ஏற்றபோது 1991-92ஆம் ஆண்டுக்கான மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 898 கோடியாக இருந்தது. மலிவு விலை மதுவை ஒழிப்பது குறித்து மக்களுக்கு நாங்கள் அளித்த உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டியிருந்தது. மதுக் கடைகளை மூடுவது என்னும் முடிவு புதிய அரசு மேற்கொள்ளும் முதல் கொள்கை முடிவாகும் என நமது முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதிலும், எங்கள் உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டும் என்பதிலும் நாங்கள் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை காரணமாகக் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழலிலும் பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். இவ்வாறாக, மலிவு விலை மதுக் கடைகளை மூடியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ. 322 கோடி உட்பட, மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 1,220 கோடியாக உள்ளது. ஆனால், நாம் நிறைவேற்ற வேண்டிய திட்டப் பணிகளுக்கான மதிப்பீடோ 1991-92ஆம் ஆண்டில் ரூபாய் 1,600 கோடி ஆக உள்ளது. நமது வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் நாம் தோல்வி அடையாதிருக்க வேண்டுமானால், மிகவும் நிதி நெருக்கடி நிறைந்த இச்சூழ்நிலையைச் சமாளிக்கச் சிறப்பு நடவடிக்கைகள் சிலவற்றை எடுக்க வேண்டியிருப்பதன் இன்றியமையாமையை, உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என உறுதியாக நம்புகிறோம்.

**176.** வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 4,397.46 கோடி என்பதையும், வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவுகள் ரூபாய் 4,814.09

கோடி என்பதையும், இதனால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் 416.63 கோடியாகும் என்பதையும், 1990–91ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டுகின்றன. 1990–91ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பற்றாக்குறையுடன், மூலதனக் கணக்கிலும் ஏனைய கணக்குகளிலும் ஏற்பட்டுள்ள பற்றாக் குறையையும் சேர்த்து, 1990–91ஆம் ஆண்டிற்கான மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 510.10 கோடியாகும் என மதிப்பிடப்பட்டது. எடுக்கப்பட்ட நடவடிக்கை களால், இந்தப் பற்றாக்குறை ரூபாய் 268.10 கோடியாகக் குறையும் என்றும் எதிர் பார்க்கப் பட்டது.

**177.** வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூபாய் 4,975.65 கோடியாகும் என்பதையும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூபாய் 5,295.16 கோடியாகும் என்பதையும் இதில் பற்றாக்குறை ரூபாய் 319.51 கோடியாகும் என்பதையும் 1990–91ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு காட்டுகிறது. மூலதனக் கணக்குகள், ஏனைய கணக்குகள் ஆகியவற்றின் மொத்தத்தில் ஏற்பட்ட விளைவைக் கருத்தில் கொண்டு, 1990–91ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 207.94 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

**178.** 1991–92ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய் கணக்கில் வரவுகள் ரூபாய் 5,347.34 கோடியாகவும், செலவுகள் ரூபாய் 6,249.83 கோடியாகவும் இருப்பதால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூபாய் 902.49 கோடி ஏற்படும். ஏனைய கணக்குகளின்



11

கீழுள்ள மொத்தப் பற்று—வரவுகளைக் கருத்தில் கொண்டால், 1991—92-ல் மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 577.41 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. 1990—91 திருத்த மதிப்பீட்டின்படி, முடிவான பற்றாக்குறை ரூபாய் 207.94 கோடியுடன், 1991—92-ல் மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 785.35 கோடியாக இருக்கும். இப்பற்றாக்குறை முக்கியமாக இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன்பே நிலவிய சூழ்நிலைகளாலேயே ஏற்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிடலாம். மொத்தப் பற்றாக்குறையை ரூபாய் 785.35 கோடியாகக் குறைப்பதில், விற்பனை வரி வசூல் சீரமைப்பால் கிடைக்கும் கூடுதல் தொகை ரூபாய் 52 கோடியும் 'நேபார்டு'-க்கு கடன் நிவாரணத் திட்டத்தின் கீழான கடன் தொகையை மாநில அரசு திருப்பிச் செலுத்தாததால் ஏற்பட்ட மீதத் தொகையான ரூபாய் 37.22 கோடியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**179.** இப்பற்றாக்குறை ரூபாய் 785.35 கோடி மாநில அரசுக் கணக்கில் மட்டுமே ஏற்பட்ட பற்றாக் குறையைக் காட்டுவதாகும். தமிழ்நாடு மின் வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட ஈடு செய்யப்படாத பற்றாக்குறை இதில் அடங்காது. அவற்றில் ஏற்பட்ட பற்றாக்குறை சுமார் ரூபாய் 330 கோடி எனத் தனியே மதிப்பிடப்பட்டுள்ளது.

**180.** தமிழ்நாடு மின் வாரியத்தில் ஏற்பட்ட பற்றாக்குறையை ஓரளவுக்கு ஈடு செய்யத் தற்போது நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். போக்குவரத்துக் கழகங்கள் தொடர்பாகவும் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. இந்த நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைகளை நிறைவு செய்ய உரிய நடவடிக்கை எடுப்போம்.

**181.** நமக்குள்ள பெரும் பிரச்சினை, செலவினங்கள் மிகவும் பெருகியிருப்பதே ஆகும். செலவில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பைக் குறைப்பதற்கு நாங்கள் பாடுபட வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது தொடர்பாகத் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மின் கட்டண இழப்பீட்டுத் தொகையாக ரூ. 350 கோடிக்கு ஒதுக்கீடு செய்துள்ள போதிலும், இந்த ஆண்டு அதனை ரூபாய் 250 கோடியாகக் குறைக்க நாம் முடிவு செய்துள்ளோம். உணவு மானியத் தொகை தொடர்பான நிதிச்சுமை கணிசமாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் நாங்கள் ரூபாய் 346 கோடியை மானியத் தொகையாக வழங்கியுள்ளோம். ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ளது போல, இங்கும் பொது விநியோக முறையிலிருந்து குறைந்த விலையிலான அரிசியை வாங்குவதற்கு ஒரு குறித்த வருமான வரம்புக்கு உட்பட்டவர்கள் மட்டுமே தகுதி பெற்றவர்கள் என அறிவிப்பது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

**182.** செலவில் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். செய்யும் செலவிற்குரிய பயன் கிடைக்கும் அடிப்படையிலான வரவு-செலவுத்திட்டத்தின் ஒருபகுதியாகச் செலவினங்கள் அனைத்தையும் நாங்கள் ஆய்வு செய்வோம். வீணான செலவைக் குறைக்க நாம் நடவடிக்கைகள் எடுப்போம். செலவில் சிக்கனத்தைக் கொண்டு வருவதற்கான இந்த நடவடிக்கைகளின் மூலம், பற்றாக்குறையை ரூபாய் 645.35 கோடியாகக் குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**183.** மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ் நாட்டுக்கு மேலும் நிதி உதவி அளிப்பது குறித்து இந்தியப் பிரதமருடனும், மத்திய நிதி அமைச்ச

ருடனும், மத்திய திட்டக்குழு துணைத் தலைவருடனும் ஜுலைத் திங்களில் விரிவாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார்கள். தமிழ்நாட்டுக்கு நிதி உதவி அளிப்பது தொடர்பாக விரைவில் அனுமதி வழங்குமாறு, முதல்வர் மீண்டும் பிரதமருக்கும் மத்திய நிதி அமைச்சருக்கும் அண்மையில் கடிதம் எழுதியுள்ளார்கள். மிகக் கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளிக்கத் தனி நிதி உதவியை அளிக்குமாறு நாங்கள் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன்னரேயே இந்த நிலை ஏற்பட்டு விட்டதால், இந்த நிதி உதவியை அளிக்க வேண்டுவது மத்திய அரசின் கடமையாக இருக்கிறது.

**184.** சிறப்பு நிதி உதவிக்காக விரைவில் அனுமதி வழங்குமாறு மத்திய அரசிடம் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும், இப்பற்றாக்குறையை ஓரளவு ஈடு செய்யப் பிற நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

**185.** வறுமையில் உழலும் ஏழை எளிய மக்களுக்கு இயன்ற வழிகளிலெல்லாம் நிவாரணம் அளிக்க இவ்வரசு ஓயாமற்பாடுபடுவதுடன், வரிவிதிப்பு—வருமானப் பெருக்குக் கொள்கைகள் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்படும்.

### வரிகள்

**186.** அரசின் மிகப் பெரிய நிதி ஆதாரம் வணிக வரியாகும். எங்களது தேர்தல் அறிக்கையில், நேர்மையாக வரியைச் செலுத்துவோர் மதித்து நடத்தப்படுவார்கள் என்றும், வரி ஏய்ப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் உறுதியளித்துள்ளோம். இவ்வாறு செயல்பட வரி விதிப்பு அமைப்புகளிலும்,

விதிகளிலும் மற்றும் நடைமுறைகளிலும் பெரிய சீர் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டியது அவசியம். வரி விதிப்புக் கட்டமைப்பை எளிதாக்க, சம்பந்தப்பட்ட அனைத்துப் பொருள்களையும் ஆராய்வதற்கு வல்லுநர்கள் அடங்கிய ஓர் உயர் நிலை வணிக வரிச் சீரமைப்புக்குழு அமைக்கப்படும்.

**187.** சென்ற ஆண்டு ''முடிவுற்றதாகக் கருதப் படும் வரிவிதிப்பு'' முறை (Deemed Assessment) அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், இந்த மாற்றம் சீராகச் செயல் படவில்லை. ஆகவே, இதற்குப் பதிலாகப் புதிதாகத் ''தன் மதிப்பீடு'' (Self Assessment) முறையைச் செயல் படுத்த முடிவு செய்துள்ளோம். இந்த முறையின்படி, ஆண்டுக்கு ரூபாய் 5 இலட்சத்திற்கு மிகாத விற்பனை அளவு கொண்ட வணிகர் தன் மதிப்பீட்டு அறிக்கையை அளிக்கலாம். அந்த வணிகர் முறைகேடுகள் ஏதும் புரியாதவராகவும், துறை விற்பனை செய்யும் குறிப்பிட்ட படிவங்களை வாங்கிப் பயன்படுத்தாத வராகவும் இருக்க வேண்டும். அவரின் அறிக்கை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றில் அங்கொன்று இங்கொன்றாக ஒரு சிறிய சதவீத அறிக்கைகள் மட்டும் சரி பார்க்கப்படும். இந்த முறையைச் செயல்படுத்துவதால் 80,000 வணிகர்கள் பயனடைவார்கள் ; தொல்லைகளிலிருந்தும் விடுவிக்கப் படுவார்கள். வரி விதிப்பு அமைப்பை எளிதாக்குவதில் ஒரு முக்கிய அடியெடுத்துவைக்கும் வகையில் வணிகர்கள் தங்கள் மதிப்பீட்டின்படி வரி செலுத்தும் முறை செயலாக்கப்படும்.

**188.** வணிகர்கள் நல வாரியம் திருத்தியமைக்கப் பட்டு, வணிகர்கள் நலனுக்கான பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

**189.** பல்வேறு வரி விகிதங்களைக் குறைத்து வரிகளைச் சீரமைப்பது எங்களது நீண்ட நெடுநோக்கு எண்ணமாகும். இதனால், வரி ஏய்ப்பைக் குறைக்கவும் சூழ்நிலை உருவாக்கப்படும். மக்களுக்கு அத்தியாவசிய மான பொருள்கள் மீதான வரியைக் குறைத்து விலைவாசியைக் குறைப்பதும், வரிச்சலுகைகள் அளித்து மாநிலத்தில் புதிய தொழில்கள் தொடங்க வகை செய்வதும் எங்களது உடனடிக் கவனத்திற் குட்பட்டுள்ளது.

* காய்ந்த இலைகள் மீது தற்போது 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இந்த இலைகளைத் தைத்து விற்பதன் மூலம் பல ஏழைப் பெண்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். ஆகவே, காய்ந்த இலைகளின் விற்பனைக்கு வரியிலிருந்து முழு விலக்களிக்கப்படுகிறது.

* பார்லி (Barley) மீது 1 சதவீத வரி விதிக் கப்பட்டுள்ளது. பிற தானியங்கள் அனைத் திற்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இனி, பார்லிக்கும் முழு விலக்கு அளிக்கப்படும்.

* மோட்டார் பொருத்தப்படாத மிதி இழு வண்டி (Cycle Rickshaw) விற்பனை மீது 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது; மிதி இழு வண்டிகள் மீதான வரி முழுமையாக விலக்கிக் கொள்ளப்படும். மாட்டு வண்டிகள் தற்போது 8 சதவீத வரிக்குட்பட்டவை. இனி இவற்றுக்கு வரி இல்லை.

* மஞ்சள், மிளகாய், கொத்துமல்லி, புளி, சீயக்காய் மீதான வரி 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

* தற்போது தங்க நகைகள் விற்பனையில் வரி ஏய்ப்பு அதிகமாக உள்ளது. இவற்றின் மீதான வரி விகிதங்களை முழுமையாக ஆய்வு செய்த பின்னர், வரிக்குறைப்பு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. தங்கப் பாளம் மீதான வரி 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைக்கப்படும். தங்கம், வெள்ளி ஆகியவற்றினால் செய்யப்படும் பொருள்கள் மீதான வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும். தங்க முலாம் பூசிய நகைகள் மீதான வரியும் 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும். இந்த மாற்றங்களைப் பெண்கள் மிகவும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

* தற்போது மருந்துகள், மருந்துப் பொருட்கள் மீது 8 சதவீத வரியும் சில குறிப்பிட்ட உயிர்காக்கும் மருந்துப் பொருட்கள் மீது சலுகையாக 4 சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் எவையெனப் பாகுபாடு செய்வதில் பல குழப்பங்கள் உள்ளன. எல்லா மருந்து, மருந்துப் பொருட்களுக்கும் இனி ஒரே சீரான 6 சதவீத வரி விதிக்க முடிவு செய்துள்ளோம். அதே நேரத்தில், உயிருக்கு அபாயம் ஏற்படும் கட்டத்தில் பயன்படுத்தப்படும், விலை உயர்ந்த, பின்வரும் மருந்துகளுக்கு வரி விலக்கு அளிப்பதன் மூலம் நோயாளிகளுக்குச் சலுகை அளிக்க முடிவு செய்துள்ளோம் :—

1. சைக்ளோஸ்போரின் (Cyclosporine).
2. ப்ளியோமைசின் (Bleomycin).

3. சைட்டோசைன் அரபினோசைட் (Cytosine Arabinoside).

4. அஜாதியோப்ரின் (Azathioprine).

5. நைட்ரோ கிளிசரின் (Nitroglycerine).

6. பென்டாக்ஸிபைலின் (Pentoxifyline).

* துருப்பிடிக்கா எஃகுப் (Stainless Steel) பாத்திரங்கள் மீது தற்போது 10 சதவீத வரி விதிக்கப்படுகிறது. எல்லாக் குடும்பங்களிலும் பரவலாக இந்தப் பாத்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன, ஆகவே, வரியை 5 சதவீதமாகக் குறைக்க முடிவெடுத்துள்ளோம்.

* காகித உறைகள் விற்பனை 8 சதவீத வரிக்குட்பட்டது. இதை 5 சதவீதமாகக் குறைக்கக் கருதியுள்ளோம்.

* விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் மீதான விற்பனை வரி 3.5 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

* இழுவை (Trailer) உதிரி பாகங்கள் மீதான வரி 15 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. காலி சாக்குகள் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

* மூன்று சக்கர வண்டிகள் மீது தற்போது 15 சதவீத வரியும், சிறிய சரக்கு வண்டிகள் மீது 8 சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. வரி விதிப்பில் சீரமைப்பு நடவடிக்கையாக இனி மூன்று சக்கர வண்டிகள் மீதும் 8 சதவீத வரியே விதிக்கப்படும்.

* பேருந்துகளுக்குக் கூடு கட்டும் தொழிலை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, முழுமையாக கட்டப்பட்டு விற்கப்படும் வாகனங்கள் மீதான வரி 15 சதவீதத்திலிருந்து 7 சதவீத மாகக் குறைக்கப்படுகிறது.

* எஃகுக் குழாய்களை முலாமிடுவதற்குப் பயன் படுத்தும் துத்தநாகம் மீது 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. தொழிலுக்கான மூலப் பொருட்கள் மீது குறைவான வரி விதிக்கும் எண்ணத்துடன், துத்தநாகம் மீதான வரியை 5 சதவீதமாகக் குறைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

* அலுமினியப் பாத்திரங்கள் மாநிலங்களுக் கிடையே விற்பனை செய்யப்படும் பொழுது, 'C' படிவம் இருக்குமானால், 4 சதவீத வரியும், 'C' படிவம் இல்லாவிடில் 10 சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் அலுமினியப் பாத்திரங்கள் தயாரிப்பை ஊக்குவிக்கும் வகையில், இனி, மாநிலங்களுக்கிடையிலான விற்பனையின் போது, 'C' படிவம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரே சீராக 4 சதவீத வரிவிதிக்க முடிவு செய்துள்ளோம்.

* தற்போது பச்சைத் தோல் மீது 2 சதவீதமும், பதனிடப்பட்ட தோல் மீது 2 சதவீதமும் வெவ்வேறு கட்டங்களில் வரி விதிக்கப்படுகிறது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பையும், தோல் பதனிடுவோர்களின் முறையீடுகளையும் கருத்தில் கொண்டு, ஒரு கட்டத்தில் மட்டும் வரி விதிப்பை மேற்கொள்ள வரிச் சீரமைப்பு நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளோம். இனி பச்சைத் தோல் மீது, கடைசியாக மாநிலத்தில் வாங்கப்படும் கட்டத்தில் 4 சதவீத வரி விதிக்கப்படும். பதனிடப் பட்ட தோலின் மீது, முதல் விற்பனைக் கட்டத்தில் சதவீத வரி விதிக்கப்படும். பச்சைத் தோல் வாங்கும்போது 4 சதவீத வரி செலுத்தப்பட்டிருந்தால், பதனிடப்பட்ட தோல் மீது வரி செலுத்த வேண்டியதில்லை.

இதுவரை குறிப்பிட்ட சலுகைகளினால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 10 கோடி இழப்பு ஏற்படும்.

**190.** டீசல் (diesel) விற்பனை மீது தமிழ் நாட்டில் 14 சதவீதமும், கர்நாடகத்தில் 18 சதவீதமும், கேரளத்தில் 20 சதவீதமும் விதிக்கப் படுகிறது. இனி டீசல் மீது வரி வீதம் 16 சதவீதமாக ஆக்கப்படும். லிட்டருக்கு 10 பைசா மட்டுமே இதனால் உயர்வு ஏற்படும். இது ஒரு பாரமாகக் கருத முடியாது.

**191.** அண்டை மாநிலங்களில் காகிதம், காகித அட்டை மீது விதிக்கப்படும் வரி வீதத்தைக் கருத்தில் கொண்டு, இவற்றின் விற்பனை வரி

4 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. அதே சமயத்தில் பத்திரிகைக் காகிதத்தின் விலையைக் குறைக்கும் வண்ணம், 'C' படிவம் அல்லாத விற்பனை மீது 10 சதவீதம் விதிக்கப்படும் முறையை மாற்றி, 'C' படிவம் இருப்பினும் இல்லாவிட்டாலும், ஒரே சீராக அனைத்துப் பன்மாநில விற்பனை மீதும் 4 சதவீத வரி விதிக்கப்படும்.

**192.** உருட்டாலைகள் வாங்கும் எஃகு உடைசல்களுக்கு (scrap) விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இனி, அறிவிப்புப் படிவம் (Declaration Form) அடிப்படையில் உருக்காலைகளால் வாங்கப்படும் எஃகு உடைசல்கள் மீது 2 சதவீத வரி விதிக்கப்படும்.

**193.** சோப்புகள் மீது விதிக்கப்படும் வரி 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படும். அதே நேரத்தில் கையினால் செய்யப்படும் சோப்புகள் மீதான வரி வீதம் 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

**194.** இந்தியாவிலேயே இரப்பர் உற்பத்தியில் இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ்நாட்டில், வரிவிதிப்புக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் விற்பனையில் இரப்பர் விற்பனை சேர்க்கப்படவில்லை. தேயிலை தவிர்த்த அனைத்து விவசாய உற்பத்திக்கும் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால், கேரள மாநிலத்தில் தேயிலை, காப்பி, இரப்பர், ஏலக்காய், மரம் ஆகியவற்றுக்கு விலக்களிக்கப் படவில்லை. அதாவது இரப்பர் மீது கேரளத்தில் வரி விதிக்கப்படுகிறது. தற்போது, கடைசியாக

வாங்கப்படும் கட்டத்தில் இயற்கை இரப்பர், எந்த வடிவத்தில் இருந்தாலும், 5 சதவீத வரி விதிக்கப்படுகிறது. ஆகவே, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் பிரிவு 2(r)-ஐத் திருத்தி, இரப்பர் விற்பனையைச் சட்டத்திற்குட்பட்டதாக்க முடிவெடுத்துள்ளோம். அதே நேரத்தில் 8 சாதாரண ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு விலக்களிக்கப்படும். இதனால், பெரிய தோட்டச் சொந்தக்காரர்கள் மட்டுமே வரி செலுத்த வேண்டிவரும்.

**195.** நடைபெற்றுள்ள சில மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவர முடிவெடுத்துள்ளோம். தற்போது இச்சட்டத்தின் பிரிவு 3 (3) (i)-க்குட்பட்ட பல பொருட்களுக்கு சலுகை விகிதத்தில் வரி விதிக்கப்படுவதால், இப்பொருட்களைத் தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருட்கள் வாங்கப்படும் போது 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது, சலுகை விலக்கிக் கொள்ளப்பட்டு, அப்பொருட்களுக்கு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரி வீதம் விதிக்கப்படும். வேலை ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படும்போது அதற்காக வாங்கப்படும் பொருட்கள் மீது, பிரிவு 3 (3) (iii)-ன்கீழ் சலுகை நிலையில் 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், வேலை ஒப்பந்தப் பணிகளில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மீது அவற்றுக்குரிய வழக்கமான வரி விதிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, வேலை ஒப்பந்தப் பணிகளில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கான சலுகையை மீளப் பெறுவதற்கு பிரிவு 3 (3) (iii)-ஐத் திருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**196.** தற்போது வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வீதத்தில் விற்பனைவரி மீது மேல்வரி விதிக்கப்படுகிறது. சென்னையில் 15 சதவீதம் முதல், கிராம, நகர, ஊராட்சிகளில் 8 சதவீதம் வரை மேல் வரி விதிக்கப்படுகிறது. மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் 15 சதவீத மேல் வரி விதித்து வரி சீரமைப்பு செய்ய எண்ணியுள்ளோம். இதனால் கிடைக்கும் கூடுதல் வருவாயிலும் இருபது சதவீதம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியமாக அளிக்கப் படும்.

**197.** தற்போது மாநிலத்தில் கொண்டு வரப்படும் மோட்டார் வண்டிகள் மீது நுழைவு வரி (Entry Tax) விதிக்கத் தனிச் சட்டம் செயலாக்கப் படுகிறது. மோட்டார் வண்டி வர்த்தகம் மாநிலத்திலிருந்து வெளியே செல்வதனால் ஏற்படும் வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக இந்த வரி விதிக்கப் படுகிறது. நுழைவு வரி விகிதம் விற்பனை வரிச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரி வீதத்திற்குத் தொடர்புடையதாக உள்ளது. இந்த நிலையை மாற்றி, நுழைவு வரிச் சட்டத்திலேயே வரிவீதம் குறிப்பிடத் தேவையான சட்ட திருத்தம் கொண்டு வர எண்ணியுள்ளோம். 900 கன சென்டிமீட்டர் வரையிலுள்ள மோட்டார் வண்டிகளுக்குக் கூடுதல் விற்பனைவரியிலிருந்து அளிக்கப்பட்ட முழு விலக்கும் அகற்றப்படும்.

**198.** தமிழ்நாடு 1962ஆம் ஆண்டு மின்சாரம் (பயன்படுத்துதல் மீது வரி விதித்தல்) சட்டத்தின் அடிப்படையில் மின்சார விற்பனை மீது வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டு, இந்தச் சட்டத்தின் அடிப்படையில் விதிக்கப் பட்டுவந்த பல்வேறு வரிகள் தமிழ்நாடு மின்

வாரியத்தினால் வசூலிக்கப்படும் மின் கட்டணத்துடன் சேர்க்கப்பட்டது. மகாராஷ்டிரம், குஜராத் போன்ற பல்வேறு மாநிலங்களில் இந்த வரி வசூலிக்கப்படுவது தெரிய வந்துள்ளது. அரசின் மிக நெருக்கடியான நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த வரியைத் திருத்திய முறையில் மீண்டும் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். மின் கட்டணத்தில் 4 சதவீதம் வரியாக அனைத்து நுகர்வோரிடமிருந்தும் வசூலிக்கப் படும். குடிசை இணைப்புகள் உள்ளிட்டு, அனைத்து வீடுகளுக்கான இணைப்புகளுக்கும் விவசாய இணைப்பு களுக்கும் சுய உற்பத்திக்கும் விலக்கு அளிக்கப்படுகிறது. இந்த மாற்றங்களைச் செயலுக்குக் கொண்டுவரத் தேவையான சட்டத் திருத்தம் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

**199.** இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மது வகைகள் மீதான வரிகளை மாற்றியமைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது. உள்நாட்டில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகளின் உற்பத்தி மீது தற்போதுள்ள ப்ரூப் லிட்டருக்கு (proof litre) ரூபாய் 60 என்றுள்ள ஆயத் தீர்வை ப்ரூப் லிட்டருக்கு (proof litre) ரூபாய் 70 என உயர்த்தப்படுகிறது. உள்நாட்டில் தயாராகும் வெளி நாட்டு மதுவகைகளின் விற்பனையில் கடைசிக் கட்டம் தவிர்த்து, மற்ற ஒவ்வொரு கட்டத்திலும் 20 சதவீத விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இது 25 சதவீதமாக உயர்த்தப்படும்.

**200.** தொழில்வரி உள்ளாட்சி நிறுவனங்களால் விதிக் கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொழில் வரிக்கான உச்ச வரம்பு தற்போது ஆண்டுக்கு ரூபாய் 250 ஆகும். அரசியல் அமைப்புச் சட்ட திருத்தத்தின் வாயிலாக இந்த வரம்பு ரூபாய் 2,500 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. குஜராத், மகாராஷ்டிரம், கர்நாடகம்

போன்ற பல மாநிலங்கள் தொழில் வரியை உயர்த்திச் சட்டங்கள் நிறைவேற்றியுள்ளன. பல மாநிலங்களில் இந்த வரி மாநில அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப் படுகிறது.

**201.** உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவது நமது நோக்கமாகும். ஆகவே, தொழில்கள் வணிகங்கள், கைவினைகள், மற்றும் வேலைகள் மீதான தொழில் வரியை ஆண்டுக்கு ரூபாய் 2,500 என்ற உச்ச வரம்போடு மாற்றியமைக்க புதிய சட்டம் கொண்டுவர முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விதமான தொழிலுக்கும் வெவ்வேறான குறைந்த அளவு, அதிக அளவு ஆகியவற்றைச் சட்டத்திலேயே நிர்ணயித்து, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் அளிக்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,500-க்குக் குறைவான ஊதியம் பெறும் அரசு அலுவலர்கள் உட்பட, அனைத்துப் பணியாளர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும். வரிவிலக்கு வரம்பு கணிசமாக உயர்த்தப் படுவதால் அரசு அலுவலர்களுக்கு அரசே தொழில் வரி செலுத்தும் முறை கைவிடப்படும்.

**202.** இந்த வரியை உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலித்துத் தம்மிடமே வைத்துக் கொள்ளும். மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் மாநில அரசே வரியை எடுத்துக் கொள்ளும் முறையிலிருந்து மாறுபட்ட ஒரு சிறப்பு அம்சம் இதுவாகும். வரி தொடர்பான அனைத்து முறையீடுகளும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் வரி முறையீட்டுக் குழுக்களினால் முடிவு செய்யப்படும். வெகுநாட்களாக நிலுவையிலிருந்து உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்தும் இந்த முயற்சியை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

**203.** மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களுக்கு அடுத்தபடியாகத் தமிழகம்தான் அதிக நகர்ப்புற வளர்ச்சியடைந்துள்ள மாநிலமாக இருப்பது மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து வெளிப்படுகிறது. நகர்ப்புற வளர்ச்சி வேகம் மேன்மேலும் அதிகரித்து வருகிறது. சீரான திட்டமிட்ட நகர மேம்பாட்டிற்காக மேலும் அதிக ஒதுக்கீடுகள் செய்ய வேண்டிய அவசியம் மாநில அரசிற்கு ஏற்பட்டுள்ளது. நகர் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காகக் கூடுதலாக நிதி ஆதாரங்களைப் பெருக்குவது தவிர்க்க முடியாத அவசியமாகும். சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய பெருநகர்ப் பகுதிகளில் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது. இந்த நகர்ப்பகுதிகளில், நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிலங்களின் 1—7—1971 அன்றைய மதிப்பின் அடிப்படையிலும், புறநகர்ப் பகுதிகளில் 1—7—1981 அன்றைய மதிப்பின் அடிப்படையிலும் வரி விதிக்கப்படுகிறது. இந்த நிலையைச் சீரமைத்து, அனைத்துப் பகுதிகளிலும் 1—7—1981 அன்றைய நிலவரப்படி நிலங்களின் மதிப்பின் அடிப்படையில் இனி வரி விதிக்கப்படும். இந்த மாற்றத்தினால், புதிய வரி தற்போதைய வரியைப்போல் ஐந்து மடங்குக்கு மிகாமலிருக்கும்படி கட்டுப்படுத்தப்படும்.

**204.** மேலும், பல நகர்ப்பகுதிகள் விரைவாக வளர்ச்சி அடைந்து வருவதைக் கருத்தில்கொண்டு, அனைத்து சிறப்பு நிலை, தேர்வு நிலை நகராட்சிகளுக்கும் நகர்ப்புற நிலவரி விதிப்பு விரிவாக்கப்படும்.

ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், உதகமண்டலம், திண்டுக்கல், கரூர், நாகர்கோவில், கும்பகோணம் ஆகிய சிறப்பு நிலை நகராட்சிகளிலும், கடலூர், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், விழுப்புரம், மயிலாடுதுறை, உடுமலைப் பேட்டை, பழனி, காரைக்குடி, இராஜபாளையம், நாமக்கல் ஆகிய தேர்வுநிலை நகராட்சிகளிலும், கொடைக்கானல், மேட்டூர் நகரியங்களிலும் நகர்ப்புற நிலவரி இனி விதிக்கப்படும். தற்போது நகர்ப்புறங்களில் அமுலில் இருக்கும் முறைகள், வரி விகிதங்கள் இந்த நகர்ப் பகுதிகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு நிலங்களின் 1–7–1981 அன்றைய மதிப்பின் அடிப்படையில் வரி விதிக்கப்படும். இதற்கான சட்ட திருத்தங்கள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

**205.** தனி நபரின் மீதான வரிச் சுமையைக் குறைப்பது அரசின் கொள்கையாகும். இதன் அடிப் படையில் தனி நபர் போக்குவரத்திற்கு மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் 50 கன செண்டிமீட்டருக்குக் குறைவான இயந்திர இருசக்கர வாகனங்கள் மீதான வாகன வரி முற்றிலும் விலக்கப்படுகிறது. இதனால் 4.5 இலட்சம் மக்கள் பயன் பெறுவர். அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 7.45 கோடி இழப்பு ஏற்படும். இந்தச் சலுகையைக் கணக்கிற் கொண்டு, அதிகக் கொள்ளளவுடைய இயந்திர இரு சக்கர வாகன உரிமை யாளர்களுடன் இந்த இழப்பைப் பகிர்ந்து கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. 50 கன செண்டிமீட்டர் முதல் 170 கன செண்டிமீட்டர் வரையிலுள்ள இயந்திர இரு சக்கர வண்டிகள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூபாய் 90 என்ற நிலையிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூபாய் 150 என உயர்த்தப்படும். 170 கன செண்டி

மீட்டர் முதல் 300 கன சென்டி மீட்டர் வரையில் உள்ள வண்டிகள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூபாய் 90 இலிருந்து ரூபாய் 200 ஆக உயர்த்தப்படும். 300 கன சென்டிமீட்டருக்கு மேற்பட்ட இரு சக்கர வண்டிகள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூபாய் 100 இலிருந்து ரூபாய் 300 ஆக உயர்த்தப்படும். இந்த மாற்றங்களுக்கு ஏற்பப் புதிய வாகனங்கள் மீதும், பழைய வாகனங்கள் மீதும் விதிக்கப்படும் ஆயுட்கால வரிகளும் மாற்றியமைக்கப்படும்.

**206.** மோட்டார் வாகன வரி அமைப்பில் சில மாற்றங்களைச் செய்ய கருதியுள்ளோம். மோட்டார் வாகனங்கள் மீது தற்போது வரி ஆண்டொன்றுக்கு பின்வருமாறு விதிக்கப்படுகிறது :—

| எடை. | இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள். | நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. | மற்றவை. |
|---|---|---|---|
| | (ரூபாயில்) | | |
| 700 கிலோவிற்குக் குறைவானவை. | 900 | 600 | 300 |
| 700 கிலோவிற்கு மேல் 1,500 கிலோவிற்குள். | 1050 | 700 | 350 |
| 1,500 கிலோவிற்கு மேல் 2,000 கிலோவிற்குள். | 1200 | 800 | 400 |
| 2,000 கிலோவிற்கு மேல் 3,000 கிலோவிற்குள். | 1350 | 900 | 450 |
| 3,000 கிலோவிற்கு மேல் | 1500 | 1000 | 500 |

இந்த வரி விகிதங்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்படும் :—

| எடை. | இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள். | நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. | மற்றவை. |
| --- | --- | --- | --- |
| | | (ரூபாயில்) | |
| 700 கிலோவிற்குக் குறைவானவை. | | மாற்றமில்லை. | |
| 700 கிலோவிற்கு மேல் 1,500 கிலோவிற்குள். | 1500 | 1000 | 500 |
| 1,500 கிலோவிற்கு மேல் 2,000 கிலோவிற்குள். | 1800 | 1200 | 600 |
| 2,000 கிலோவிற்கு மேல் 3,000 கிலோவிற்குள். | 1950 | 1300 | 650 |
| 3,000 கிலோவிற்கு மேல். | 2250 | 1500 | 750 |

**207.** வாடகைக்கு விடப்படும் மோட்டார் வண்டிகள் மீதான காலாண்டு வரி விகிதங்களில் மாற்றங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வாடகைச் சீருந்து மீதான காலாண்டு வரி ரூபாய் 120 இலிருந்து ரூபாய் 150 ஆக உயர்த்தப்படுகிறது. சாதாரண வாடகைச் சீருந்து மீதான காலாண்டு வரி ரூபாய் 90 இலிருந்து ரூபாய் 120 ஆக உயர்த்தப்படுகிறது. பெரிய வாடகைச் சீருந்து (Maxi Cabs) மீதான வரி விதிப்பு இருக்கைகள் அடிப்படையில் மாற்றியமைக்கப் படுகிறது. இனி அது காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 125 என்ற அடிப்படையில் வசூலிக்கப்படும்.

208. சரக்கு வண்டிகள் மீதான வரி விகிதங்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது.

| வண்டியின் எடை. | தற்போதைய காலாண்டு வரி | புதிய காலாண்டு வரி |
|---|---|---|
| | (ரூபாயில்.) | |
| 3,000 கிலோவிற்கு உட்பட்டவை | 450 | 520 |
| 3,000 கிலோவிற்கு மேல் 5,500 கிலோவிற்குள் | 750 | 845 |
| 5,500 கிலோவிற்கு மேல் 9,000 கிலோவிற்குள் | 1150 | 1290 |
| 9,000 கிலோவிற்கு மேல் 12,000 கிலோவிற்குள் | 1490 | 1690 |
| 12,000 கிலோவிற்கு மேல் 13,000 கிலோவிற்குள் | 1500 | 1840 |
| 13,000 கிலோவிற்கு மேல் 15,000 கிலோவிற்குள் | 1840 | 2090 கூடுதலான ஒவ்வொரு 250 கிலோ விற்கும் ரூ. 50 கூடுதல். |
| 15,000 கிலோவிற்கு மேல் | 1840 கூடுதலான ஒவ்வொரு 250 கிலோ-விற்கும் ரூ. 50 கூடுதல். | |

209. பேருந்துகள் மீதான வாகன வரியிலும் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். மாநகரப் பகுதிகளில் இயங்கும் பேருந்துகள் மீதான வரி

தற்போதைய நிலையிலேயே தொடர்ந்து இருக்கும். கிராமப்புறங்களில் இயங்கும் பேருந்துகள் மீதான காலாண்டு வரி இருக்கைக்கு ரூபாய் 275 என்ற நிலையிலிருந்து ரூபாய் 325 ஆக உயர்த்தப்படும். நகர்ப்புறங்களில் இயங்கும் பேருந்துகள் மீதான காலாண்டு வரி இருக்கைக்கு ரூபாய் 230 லிருந்து ரூபாய் 260 ஆக உயர்த்தப்படும். விரைவுப் பேருந்துகளுக்கான காலாண்டு வரி தற்போதைய நிலையான இருக்கைக்கு ரூபாய் 250 என்பதிலிருந்து ரூபாய் 300 ஆக மாற்றியமைக்கப்படும். பேருந்து வாகன வரி மீதான மேல் வரி தொடர்ந்து வசூலிக்கப்படும்.

**210.** வாகன வரி விதிப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் 1—10—1991 முதல் செயலுக்கு வரும். ஆண்டு வரி செலுத்தியவரிடமிருந்து அரையாண்டுக்கான கூடுதல் வரி 1992-93 ஆண்டுக்கான வரி 1992-மார்ச்சில் வசூல் செய்யப்படும்போது சேர்த்து வசூலிக்கப்படும்.

**211.** விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் வகையிலும், வரி வசூல் தொல்லைகளிலிருந்து விடுதலை அளிக்கும் எண்ணத்துடனும், நெல், கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை, தென்னை, சோளம், கம்பு, கடலை, பருத்தி, எள் போன்ற மலைத் தோட்டப் பயிரல்லாத பிற பயிரினங்கள் மீது விதிக்கப்படும் விவசாய வருமான வரி அறவே விலக்கப்படுகிறது. இதனால் 45,000-த்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவர்.

**212.** மேலும், மலைத் தோட்டப் பயிர்கள் மீது விதிக்கப்படும் விவசாய வருமான வரியையும் மாற்றியமைக்கக் கருதியுள்ளோம். வருமான விலக்கு வரம்பை ரூபாய் 10,000 விருந்து ரூபாய் 22,000 ஆக

உயர்த்த முடிவெடுத்துள்ளோம். இனி மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வரி விதிக்கப் படுவதால், நிலைப்படுத்தப்பட்ட ஏக்கர் (Standard Acre) முறையை மாற்றி சாதாரண ஏக்கர் அடிப்படை பின்பற்றப்படும். ஒட்டு மொத்த வரி செலுத்தும் முறையில் 8 ஏக்கர் வரை விலக்களித்து உச்ச வரம்பு 40 ஏக்கரிலிருந்து 50 ஏக்கராக உயர்த்தப்படும். தற்போதுள்ள சிக்கல் நிறைந்த படிமுறை வீதங்கள் பின்வருமாறு சீரமைக்கப்படும் :—

| படிமுறை வீதங்கள் | ஏக்கருக்கு வரி ரூபாயில். |
|---|---|
| 8 ஏக்கர் வரை | முழு விலக்கு |
| 8 முதல் 12 ஏக்கர் வரை | 150 |
| 12 முதல் 25 ஏக்கர் வரை | 200 |
| 25 முதல் 40 ஏக்கர் வரை | 300 |
| 40 முதல் 50 ஏக்கர் வரை | 500 |

இந்த மாற்றங்கள் சிறிய விவசாயிகள் ஒட்டு மொத்த வரி முறையைப் பின்பற்ற வகை செய்யும், கேரள, கர்நாடக மாநிலங்களில் உள்ளது போல தன்மதிப்பீடு முறை, முன்வரி செலுத்துதல் போன்றவற்றுக்கான திருத்தங்களும் மேற்கொள்ளப் படும். இந்த மாற்றங்களுக்கான திருத்தங்கள் இக்கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்படும்.

**213.** 1991–92ஆம் ஆண்டில் இறுதிப் பற்றாக் குறை ரூபாய் 785.35 கோடியாக இருக்கும் என்று நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளேன். செலவுகளைக் குறைக்கச் சில முடிவுகள் எடுப்பதன்

மூலம், இப்பற்றாக்குறை ரூபாய் 645.35 கோடியாகக் குறைக்கப்படும். சற்றுமுன்னர் நான் அறிவித்த நடவடிக்கைகளின் மூலம், ஏறக்குறைய ரூபாய் 70 கோடி நிகரக் கூடுதல் வருமானம் பெற இயலும். அதன் பயனாக, 1991–92ஆம் ஆண்டு முடிவில் இறுதிப் பற்றாக்குறை ரூபாய் 575.35 கோடியாக இருக்கும்.

**214.** ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல சிறப்பு நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசை நாம் கோரியுள்ளோம். இதில், மாநிலத் திட்டத்திற்கான இயல்பான மத்திய நிதியுதவியில் அதிகரிப்பு, பொது மக்களிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் பெறும் கடன்களில் அதிகரிப்பு, வெளி உதவித் திட்டங்களுக்கான நிதியுதவியில் அதிகரிப்பு, சிறு சேமிப்புக் கடன் வடிவில் தொடக்கப் பற்றாக்குறைக்கு ஈடு செய்யத் தனி உதவி, மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பிற்கு இழப்பீடு, கடல் எல்லைப் பகுதி பிரச்சினைகளுக்குச் சிறப்பு நிதியுதவி ஆகியவை அடங்கும். 1990–91ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1991–92ஆம் ஆண்டில் மத்திய நிதியுதவி அதிகரிப்பு மிகக் குறைந்த அளவிற்கே கிடைக்கப் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. 1990–91ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு அளித்த மத்திய நிதியுதவியில் மிக அதிக உயர்வு 65 சதவீதமாகும். ஆனால், தமிழ்நாடு 1990–91ஆம் ஆண்டில் 9.7 சதவீத உயர்வே பெற்றது. பொதுமக்களிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் பெற்ற கடன்களிலும் இதே நிலைமைதான். தொடக்கப்பற்றாக்குறை நிலைமையைச் சமாளிப்பதற்கு, கடந்த காலத்தில் ஏனைய மாநிலங்களுக்கு மத்திய அரசு சிறப்பு நிதியுதவி

வழங்கியுள்ளது. அத்தகைய சிறப்பு நிதியுதவியை நாமும் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

**215.** மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்தியதால் ஏற்பட்ட இழப்பிற்கு நாம் இழப்பீடு கோருவது முற்றிலும் நியாயமானதே, மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பிற்கு மத்திய அரசு மாநிலங்களுக்கு இழப்பீடு அளிக்கும் திட்டம் 1978ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையிலும் மத்திய அரசால் செயற்படுத்தப்பட்டு வந்தது. மதுவிலக்கு என்பது அரசமைப்புச் சட்டத்திலேயே இடம்பெற்றுள்ள நெறிமுறைக் கோட்பாடாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்நிலைமையைப் பிரதமரின் கவனத்திற்குக் குறிப்பாகக் கொண்டுவரக் கடிதம் எழுதியுள்ளார்கள். முந்தைய திட்டத்தின் அடிப்படையில் 1987-88 முதல் 1989-90 வரையிலான கால அளவிற்கு 50 சதவீத இழப்பீட்டை அவர்கள் கோரியுள்ளார்கள். இந்நடைமுறையை மீண்டும் கொண்டுவர வலியுறுத்தியதுடன், நடப்பாண்டில் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதற்கு 100 சதவீத நிதியுதவி கோரியுள்ளார்கள்.

**216.** தமிழ்நாட்டிற்குக் கடற்கரை எல்லைப்பகுதி உள்ளது. அது நிலவியல் அமைப்பின்படி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. கடற்கரை எல்லைப் பகுதிகள் மேம்பாட்டிற்காகக் கணிசமான அளவு செலவு செய்ய வேண்டியுள்ளது. எனவே, கடற்கரை எல்லைப் பகுதி மேம்பாட்டிற்காகத் தனி நிதி ஒதுக்கீடு செய்யுமாறு வலியுறுத்தியுள்ளோம். நம்முடைய கூட்டாட்சி முறையில் மாநில அரசு நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் போது, மத்திய அரசு உதவி செய்வதற்குக்

கடமைப்பட்டுள்ளது. இப்பெரிய நாட்டின் ஒருமைப் பாட்டிலும், ஒற்றுமையிலும் நாம் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளோம். மைய, மாநில நிதி உறவுகள் தொடர்பான முற்போக்கு அணுகுமுறை வாயிலாக இந்த நம்பிக்கைக்கு அரண் சேர்க்க வேண்டியது இன்றியமையாதது. மத்திய அரசு இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு போதுமான நிதியுதவி அளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**217.** இப்போது, இந்த வரவு-செலவுத் திட்ட உரையை முடிக்கும் நிலையில் உள்ளேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தமிழக மக்கள் மாபெரும் அளவில் வாக்களித்து வழங்கிய வெற்றி நம்மீது பெரும் பொறுப்பைச் சுமத்தி உள்ளது. மக்கள் வழங்கிய இந்த மாபெரும் வெற்றி மூலம் நமக்கு இட்டுள்ள ஆணையை நிறைவேற்றும் வகையில், நம்மீது பல பணிகள் சுமத்தப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்துள்ளோம். இடர்ப்பாடான நிதி நிலை நிலவும் மிகவும் நெருக் கடியான கால கட்டத்தில் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். இப்பொழுது நாம் எதிர்நோக்கி வரும் இத்தகைய சூழ்நிலையைக் கடந்த காலத்தில் எந்த ஒரு அரசும் எதிர்நோக்கி இருந்ததில்லை. அண்மையில்தான் பதவி ஏற்றுள்ள நாங்கள், மக்கட்குப் பல்வேறு நலப் பணிகளை ஆற்ற வேண்டும் என விழைந்த போதிலும், எல்லா வற்றையும் இவ்வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெறச் செய்ய இயலவில்லை. இருந்தபோதிலும், நாங்கள் இப்பணியை இயன்ற அளவிற்குச் செவ்வனே

செய்துள்ளோம். எனினும், இது போதுமானது அல்ல என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். மாநிலத்தில் உள்ள ஏழைகள், நலிவுற்றவர்கள், ஊனமுற்றவர்கள் இலட்சக் கணக்கானோருக்குப் பலவழிகளில் உதவி செய்ய நாங்கள் முயற்சி மேற்கொள்ளாமல் இல்லை என்பதை, இப்பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கும் அவர்கள் மூலமாக மக்களுக்கும் நாங்கள் உறுதியளிக்க விழைகிறோம். நாங்கள் தற்போது அறிவித்துள்ள வருமானம் பெருக்கும் முயற்சிகள் இதற்குப் போதுமானதாக இருக்காது. எனினும், ''செல்வந்தர்கள் சிறிது கூடுதல் வரியைச் செலுத்தினால் மட்டுமே உதவி தேவைப்படும் வறிய மக்களுக்குப் பயன் கிட்டும்'' என்ற அனைவரும் அறிந்து ஏற்றுக்கொண்ட கோட்பாட்டின் அடிப்படையில்; நாங்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து அளித்துள்ளோம். வரவு-செலவுத் திட்டத்தில் உரியவாறு இடம் பெற்றுள்ள கருத்துக்கள், கொள்கைகள், திட்டப்பணிகள் ஆகியவற்றை நமக்கு வழங்கும் ஊற்றுக்கண்ணாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள். அவரது ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் நமது பொறுப்புக்களைத் துணிவுடனும் கருணை உணர்வுடனும் அறிவுடனும் ஆர்வத்துடனும் நிறைவேற்றுவோம் என உறுதியாக நம்புகிறோம்.

**218.** இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கிட எனக்கு எல்லா வகையிலும் செம்மையான முறையில் உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன் அவர்களுக்கும், அவருடன் இணைந்து இருந்து

சிறந்த பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**219.** 1991–92ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக் கொள்கிறேன்.

**வணக்கம்.**

சென்னை,
1991ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்கள் 4ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2022
ஆவணித் திங்கள் 19ஆம் நாள்.

**இரா. நெடுஞ்செழியன்,**
நிதி அமைச்சர்.